யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழியல்

JOURNAL OF TAMIL STUDIES

JUNE 2003

63

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

Board of Governors

2003

CHAIRMAN

Mr. S. SEMMALAI

Hon'ble Minister for Health and Education, Govt. of Tamilnadu

VICE-CHAIRMEN

Dr. V.C. KULANDAISWAMY
Former Vice-Chancellor, Indira Gandhi National Open University, New Delhi.
(IATR-Representative)

Vice-Chancellor
University of Madras, Chennai.

Vice-Chancellor
Annamalai University, Annamalai Nagar.

Vice-Chancellor
Madurai Kamaraj University, Madurai.

Vice-Chancellor
Tamil University, Thanjavur.

MEMBERS

Dr. F. GROS
Former Director, French Institute of Indology, Pondicherry (IATR-Representative).

DIRECTOR
Central Institute of Indian Languages, Mysore.

SECRETARY TO GOVERNMENT
Dept. of Tamil Development - Culture & Religious Endowments, Govt. of Tamilnadu.

COMMISSIONER AND SECRETARY
Department of Finance, Govt. of Tamilnadu.

MEMBER SECRETARY

Dr. S. KRISHNAMOORTHY
Director, International Institute of Tamil Studies, Chennai.

தமிழியல்

JOURNAL OF TAMIL STUDIES

63

JUNE 2003

Articles in the Journal of Tamil Studies do not necessarily represent either the views of the International Institute of Tamil Studies or those of the Board of Editors.

BOARD OF EDITORS

Dr. F. GROS
Former Director, French Institute of Indology, Pondicherry.

Dr. KAMIL V. ZVELEBIL
Former Professor of Dravidian Linguistics, University of Utrecht, Holland.

Dr. G.L. HART
Dept. of South and South East Asian Studies, University of California, U.S.A.

Dr. S. AGESTHIALINGOM
Former Vice-Chancellor, Tamil University, Thanjavur.

Dr. A. VELUPILLAI
Former Professor of Tamil, University of Jaffna, Srilanka.

Editor-in-Chief
Dr. S. KRISHNAMOORTHY

Associate Editor
Dr. D. RENGANATHAN

OUR CONTRIBUTORS

Dr. A. Adhityan
Professor, Department of Linguistics, Madurai Kamaraj University, Madurai.

Dr. A. Ra. Sivakumaran
Assistant Professor, National Institute of Education, Nanyang Technological University, Singapore.

Ms. Selva Ambigai Nataraja
Department of Tamil, Jaffna University, Sri Lanka.

Dr. P.E. Mohan
Reader, Department of History, Annamalai University, Annamalainagar.

Dr. P. Pushparatnam
Department of Archaeology, Tamil University, Thanjavur.

Dr. A. Pandurangan
Professor (Retd.), Tolkappiyar Centre for Fundamental Research, Pondicherry.

Dr. R. Alalasundaram
Professor (Retd.), 11, Kailasnagar II street, Lawspet, Pondicherry.

Mr. Neela Padmanabhan
Writer and Deputy Chief Engineer (Retd.), Kuriyathi Road, Manacaud P.O., Thiruvananthapuram.

CONTENTS

1	துறைவழக்குச் சொற்கள்	ஏ. ஆதித்தன்	1
2	சிங்கப்பூர்த் தமிழ்ப் புதுக்கவிதைகள் உள்ளடக்கம்-வெளிப்பாடு	அ. ரா. சிவகுமாரன்	11
3	தமிழர் வழிபாடு	செல்வ அம்பிகை நடராசா	39
4	Historical Lessons From the Man of Twentieth Century: The Linguist - Professor T.P. Meenaksisundaran	P.E. Mohan	53
5	Tamil Coins From Southern Sri Lanka - A Historical Perspective	P. Pushparatnam	67
6	A Note On Ceyticin Verbals	A. Pandurangan	79
7	Left-hand and Right-hand Caste Disputes In 18th Century	R. Alalasundaram	85
8.	Common cultural roots of the 7 SAARC Countries - lying Inter-twined in the folklore and folksongs of the region	Neela Padmanabhan	95

துறைவழக்குச்சொற்கள்

ஏ. ஆதித்தன்

1.0 கலைச்சொற்கள் எனப்படும் துறைவழக்குச்சொற்களின் விளக்கத்தையும் அவற்றின் வகைகளையும் விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும் கலைச்சொற்கள் என்றால் என்ன என்பதும் அவற்றைப் பொதுச் சொற்களிலிருந்து எவ்வாறு வேறுபடுத்துவது என்பதும் இங்கு ஆய்வுப்பொருளாக அமைகின்றன

1.1 ஆங்கிலமொழியில் குறிப்பிடப்பெறும் அறிவியல்-தொழிலியல் சொற்கள் (Scientific and Technical terms) என்பதற்கு இணையாகத் தமிழில் கலைச்சொற்கள் (Technical terms) என்னும் தொடர் பயன்படுத்தப்படுகின்றது இவ்விரண்டின் இடையே சிறிது பொருள் வேறுபாடு இருப்பது தெரியவந்துள்ளது மேலைநாட்டறிஞர்கள் அறிவியல்சொற்களையும் தொழிலியல்சொற்களையும் வேறுபடுத்தி இவ்விரண்டின் தொகுதியினை terminology என்ற பெயரால் குறிப்பிடுகின்றனர். தமிழில் கலைச்சொற்கள் என இவற்றினைச் சுட்டுவதனைக் காட்டிலும் துறைவழக்குச்சொற்கள் எனக் குறிப்பிடுவதே முற்றிலும் பொருத்தமாக அமையப்பெற்றுள்ளது.

ஏனெனில் அறிவியல் - தொழிலியல் சாராத பிறதுறைகளில் வழங்கும் சொற்களும் தமிழில் கலைச்சொற்களாகக் கருதப்படுகின்றன. மேலும் இச்சொற்கள் குறிப்பிட்ட துறையினரால் மட்டுமே பயன்படுத்தப்பெறுவதால் இக்கட்டுரையில் கலைச்சொற்கள் என்பதற்குப் பொருத்தமான வடிவமாகத் துறைவழக்குச்சொற்கள் என்பது பயன்படுத்தப்படுகின்றது.

துறைவழக்குச்சொற்கள் பற்றிய ஆய்வினைத் தொடங்கி வைத்தவர் யூஜின் ஊஸ்டர் (1898) என்பவராகும். இவ்வாய்வின் அடிப்படையில் துறைவழக்குச்சொல் தகவல் மையம் 1931 ஆம் ஆண்டு உருவாக்கப்பெற்றது. ஹம்ப், அமெரிக்க மொழியியல் துறைவழக்குச்சொற்களைத் (American Linguistic terms) தொகுத்து அந்நாட்டில் இவை வழங்கப்பெறும் முறைமையினை விவரித்துள்ளார். இவற்றைச் சிகாகோ பல்கலைக்கழகத் துறைவழக்குச்சொல் குழுவினர் நூலாக வெளியிட்டுள்ளனர்.

துறைவழக்குச்சொற்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு வரைவிலக்கணம் தமிழில் கிடைக்கப்பெறவில்லை எனலாம் எனவே இவ்வகைச்

சொற்களின் பண்புகளைக் கண்டறிவதன் வாயிலாக இவற்றின் வரைவிலக் கணத்தினை உருவாக்குதல் இயலும்.

1.2 மேலைநாட்டு அகராதிகள் அனைத்தும் சிறப்புப் பொருட்கூறுகளுடைய சொற்களைத் (Wiezbicka, 1985:18) துறைவழக்குச்சொற்கள் எனக் குறிப்பிடுகின்றன இங்குச் சிறப்புப் பொருட்கூறுகள் எவை என்பதை இதுவரை யாரும் வரையறுத்துக் கூறவில்லை. குறிப்பிட்ட துறையினர் ஒரு சொல்லுக்கு ஒரு குறிப்பிட்ட பொருளை வரையறை செய்கின்றனர். இப்பொருளில் இச்சொல் பொதுமொழியில் வழங்கப் பெறுவதில்லை. இவ்வடிப்படையில்தான் சிறப்புப்பொருள் கூறுகளுடைய சொற்களே துறைவழக்குச் சொற்கள் எனக் குறிப்பிடப் பெற்றிருக்கலாம்.

ஹெல்தாய் (1985:2) அகராதியில் காணப்பெறும் சொற்களை இரண்டாகப் பகுத்து அவற்றில் பொதுமொழியில் (general language) வழங்காத சொற்களைத் துறைவழக்குச் சொற்கள் எனக் குறிப்பிடுக்கின்றார்.

1.3 துறைவழக்குச்சொற்கள் பொதுமொழியில் பயன்படுத்தப் பெறுவதில்லை எனவும் இங்ஙனம் பொதுமொழியில் வழங்கப்பெறாதவையே துறைவழக்குச் சொற்கள் எனவும் கருதப்படுகின்றது பல துறைவழக்குச் சொற்கள் பொதுமொழியிலும் பயன்படுத்தப்படுகின்றன என அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர் சில பொது அகராதிகள் துறைவழக்குச் சொற்கள் சிலவற்றைப் பொதுமொழியில் வழங்கப்பெறுவதாகக் கருதி அவற்றை அகராதிகளில் குறிப்பிட்டுள்ளன.

'மின்சாரம்' எனும் துறைவழக்குச்சொல் பொதுமொழியில் அன்றாடம் பயன்படுத்தப்பெறுகின்றது. ஒரு துறைவழக்குச்சொல் சுட்டும் கோட்பாடு பொதுமக்களுக்குப் பயனாக்கம் பெறும் நிலையில் அது பொதுமொழியில் இடம்பெறத் தொடங்குகின்றது என்பது தெரியவருகின்றது.

'மின்சாரம்' எனும் துறைவழக்குச்சொல் பொதுமக்களால் அதன் பயன் அடிப்படையில் மட்டுமே பயன்படுத்தப்பெறும்; மின்துறையினர் மின்சாரத்தினை அதற்குரிய கோட்பாட்டின் அடிப்படையில் பயன்படுத்துவது போன்று பொதுமக்கள் கையாளுவதில்லை. எனவே ஒரு துறைவழக்குச்சொல் அது வழங்கப்பெறும் துறையினரால் துறைவழக்குச் சொல்லாகவும் பொதுமக்களால் பொதுமொழிச் சொல்லாகவும் வெவ்வேறு பொருளில் கையாளப்பெறும் என்பது

தெரியவருகின்றது. இத்தகைய வடிவங்கள் ஒருசொல் பலபொருள் வகையினவாகவே அமைகின்றன.

1.4 புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கோட்பாட்டிற்கு உருவாக்கப்பெறும் சொற்கள் துறைவழக்குச்சொற்கள் எனக் கருதப்படுகின்றன. தமிழ் மொழியில் காணப்பெறும் பல இலக்கணத் துறைவழக்குச் சொற்கள் இக்காலத்தில் புதிதாக உருவாக்கப் பெற்றவை அல்ல. இங்குக் குறிப்பிடப்பெற்ற விளக்கத்தின்படி இவற்றைத் துறைவழக்குச் சொற்கள் எனக் குறிப்பிட முடியாது அன்றோ?

1.5 துறைவழக்குச் சொற்கள் என்பன செயல்முறையினையும் இயந்திரங்கள் தொடர்பானவற்றையும் குறிக்கும் என ஹெல்தாய் (1985: 2) குறிப்பிட்டுள்ளார். செயல்முறையியல், இயந்திரவியல் மட்டுமின்றிப் பல்வேறு துறைகளில் வழங்கப்பெறும் சொற்களும் துறைவழக்குச் சொற்கள் என்பதால் இக்கருத்தினை ஏற்றுக் கொள்ளவியலாது. இவை ஒரே கருத்தினைக் குறிக்க மயக்கமற்ற பொருளைத்தரும் சொற்கள் (unambiguous words) எனவும் (Bejoint, 1988:6) குறிப்பிடப்பெற்றுள்ளன.

துறைவழக்குச் சொற்கள் சுட்டும் கோட்பாட்டில் மாற்றம் ஏற்படும் நிலையில் மட்டுமே துறைவழக்குச் சொற்கள் உணர்த்தும் பொருளில் மயக்கம் ஏற்படுவதுண்டு. சான்றாக அணு, தொழிற்பெயர், கற்பு எனும் சொற்கள் வரலாற்று நிலையில் பல பொருள்மாற்றங்களைச் சந்தித்திருப்பதால் இச்சொற்கள் இக்காலத்தில் சிலருக்குப் பொருள் மயக்கம் தருவனவாக அமையப்பெற்றுள்ளன.

1.6 மேலைநாட்டறிஞர்கள் பலர் சிக்கலான கருத்தை உணர்த்தப் பயன்படுத்தப்பெறும் சிறிய வடிவங்களே துறைவழக்குச் சொற்கள் எனக் குறிப்பிட்டுள்ளனர். துறைவழக்குச் சொற்கள் காரணச்சொற்களாக அமையும் நிலையில் இவை சிறிய வடிவங்களாக அமையப்பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சிக்கலான கருத்து எனக் குறிப்பிடுவது பொதுமொழியினை மட்டுமே கையாளுபவர்களுக்கே பொருந்தும். துறைவழக்குச் சொல்லினைப் பயன்படுத்தும் அவ்வத் துறையினருக்கு இது சிக்கலை ஏற்படுத்துவதில்லை. துறைவழக்குச் சொற்களை அறிமுகப்படுத்தும் மொழியில் மட்டுமே இச்சொற்கள் சிறிய வடிவினவாக அமையப்பெறும். இம்மொழியிலிருந்து பிற மொழிகள் கடன் வாங்கும் நிலையில் இவை பெரும்பாலும் கடன் மொழிபெயர்ப்பாகவே (loan translation) அமையும்.

17 துறைவழக்குச் சொற்கள் அவ்வத் துறையினரால் மட்டுமே பயன்படுத்தப்படும் எனக் குறிப்பிடப்பெறுகின்றது துறைவழக்குச் சொல் உணர்த்தும் கோட்பாடு மக்களுக்குப் பயனாக்கம்பெறும் நிலையில் அவ்வடிவம் அது பொதுமொழியின் பயன்பாட்டில் வந்துவிடும். ஆனால் அது மக்களால் துறைவழக்குச் சொல்லாகப் பயன்படுத்தப் பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது

18 துறைவழக்குச் சொற்கள் பெரும்பாலும் சொல்வகையில் பெயர்ச் சொற்களாகவும் வடிவ நிலையில் தொகைச்சொற்களாகவும் அமையப் பெற்றுள்ளன. இவை இரண்டு முதல் ஆறு சொற்களை உடையனவாக அமையப் பெற்றுள்ளன.

19 துறைவழக்குச் சொற்கள் பெரும்பாலும் உலக அளவில் பயன்பாடுடையனவாக (international) அமையப் பெற்றுள்ளன. வடிவம், சொல்வகை ஆகியனவற்றைத் துறைவழக்குச்சொற்களின் இலக்கணமாகக் கருதுதல் இயலாது என்பது குறிப்பிடத்தக்கது. துறைவழக்குச் சொற்கள் பெரும்பாலும் அண்மைக் காலத்தில் உருவாக்கப் பெற்றமையால் இவை ஒரு பொருளுடைச் சொற்களாக (monosemantic words) அமைந்துள்ளன.

110 துறைவழக்குச் சொல்வடிவம் பொதுமொழியில் பயன்படுத்தப்பெறும் நிலையில் மட்டுமே இவற்றை உருவகப்படுத்துதல் இயலும்

சான்றாகக் 'கட்டிங் பிளையர்' என்ற சொல் ஒளிவுமறைவின்றிப் பேசுபவரைக் குறிக்க உருவகப்படுத்துவதனைக் குறிப்பிடலாம் துறைவழக்குச் சொற்கள் உருவகப்படுத்தப் பெறுவதாகக் கூறப்பெறும் நிலையில் இவை சுட்டும் முழுப்பொருளையும் உணர்த்தும் வகையில் உருவகப்படுத்தப் பெறுவதில்லை என்பது மிகவும் கருதற்பாலது. 'கட்டிங் பிளையர்' என்பது கோட்பாட்டு நிலையில் பல பொருண்மைக் கூறுகளைக் கொண்ட ஒரு துறைவழக்குச்சொல். பொருட்களைக் கூறுபடுத்துதல் எனும் ஒரே பயனாக்கப் பண்பினை அடிப்படையாகக் கொண்டு உண்மையை வெளிப்படையாகப் பேசுபவரைக் குறிக்கும் வகையில் இது உருவகப்படுத்தப்பட்டுள்ளது இதனைப் போன்று அடிக்கடி கோபத்தால் அதிர்ச்சி ஏற்படுத்துபவரை 'மின்சாரம்' என உருவகப்படுத்துவதுண்டு. இங்கு மின்சாரம் அதிர்ச்சி (shock) அளிப்பது எனும் விளைவுப் பண்பு மட்டுமே கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. 'மின்சாரம்' என்பது

உருவகப்படுத்தப்பெறும் நிலையில் துறைவழக்குச் சொல்லாகச் செயல்படுதலில்லை என்பது குறிப்பிடத்தக்கது

துறைவழக்குச் சொற்கள் அவ்வத்துறையில் பலபொருள் ஒரு சொல்லாக அமையப் பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட ஒரு துறையில் ஒரு சொல் துறைவழக்குச்சொல்லாகப் பயன்படும் சூழலில் அது ஒருபொருள் ஒருசொல்லாகவே அமையப்பெறும்.

Morphology என்ற சொல் உயிரியலில் புறவடிவவியல் என்பதனையும் மொழியியலில் உருபனியல் என்பதனையும் சுட்டி அவ்வத்துறையில் ஒரு பொருள் ஒரு சொல்லாகவே செயல்படுகின்றது இது அறிவியல் துறையிலிருந்து மொழியியல் கடன்பெற்ற சொல்வடிவம் ஆகும்.

1.11 துறைவழக்குச் சொற்களின் பொருள் சுருக்கமானதாகவும் (Heltai, 1985:2) பொருட்குழப்பம் இல்லாததாகவும் அமையப்பெறுகின்றன. மேலும் இவற்றில் பொருள்மாற்றம் ஏற்படுவதில்லை (Picoche, 1977:2) என்பதும் குறிப்பிடத்தக்கது. இவற்றின் பொருள் காலப்போக்கில் ஏற்படும் கருத்து வளர்ச்சி மாற்றத்தால் மட்டுமே மாறுவதுண்டு. அணு (atom) எனும் துறைவழக்குச் சொல்லின் கோட்பாடு இக்காலத்தில் மாற்றமடைந்துள்ளமையால் இச்சொல்லில் பொருள்மாற்றம் ஏற்பட்டுள்ளது.

துறைவழக்குச் சொற்களின் பொருள் சுருக்கமானதாக இருக்கும் என்னும் விளக்கம் ஏற்புடையது இல்லை. இச்சொல் இடுகுறிச்சொல்லாக அமையும் நிலையில் இதன் பொருள் விளக்கம் சுருக்கமாக அமைவதில்லை. துறைவழக்குச் சொற்கள் பெரும்பாலும் இருண்மைச் சொற்களாக (obscure words) அமையும் நிலையில் அவற்றின் பொருள் சுருக்கமாக அமைதல் இயலாதன்றோ?

சில அறிஞர்கள் (Emberger, Hall, 1955:37) இடைநிலைத் துறைவழக்குச் சொற்கள் (Semi technical terms) என்ற ஒரு வகையினைக் குறிப்பிட்டுள்ளனர். 'சோடியம் குளோரைடு' எனும் சொல் பொதுமொழியில் உப்பு என வழங்கப்பெறுவதால் 'உப்பு' என்பது இடைநிலைத் துறைவழக்குச் சொல்லாகக் கருதப்படுகின்றது.

சோடியம் குளோரைடு என்பது வேதியியலில் பல வேதியியல் பண்புகளைக் கொண்ட ஒன்றனைக் குறிக்கப் பயன்படுத்தப்பெறும் ஒரு துறைவழக்குச்

சொல்லாகும் பொதுமொழியில் இது உப்புச்சுவைப் பொருளில் மட்டும் பயன்படுத்தப்பெறும் நிலையில் இதனை ஒரு துறைவழக்குச் சொல்லாகக் கருதவியலாது துறைவழக்குச் சொல் பயனாக்கத்தின் அடிப்படையில் பொதுமொழியில் வேறுபட்ட பொருளில் கையாளப் பெறுவதனையே இடைநிலைத் துறைவழக்குச் சொற்கள் எனச் சுட்டப்பெறுகின்றது. இங்கும் 'சோடியம் குளோரைடு' என்பதும், 'உப்பு' என்பதும் பொருளிணைச் சொற்கள் அல்ல

112 மொழிப்பயன்பாட்டில் துறைவழக்குச் சொற்கள் அருகியவழக்குச் சொற்களாக (Dubore, 1977:81) அமைவதுண்டு. அதனால் பெரிதும் பயின்று வராத சொற்களைத் துறைவழக்குச் சொற்களாகக் கருதுதல் இயலாது. மொழியில் துறைவழக்குச் சொற்கள் அல்லாத அருகியவழக்குச் சொற்களும் (archaic words) பல காணப்பெறும். எனவே இதனை ஒரு பண்பாகக் கருதுதல் இயலாது.

113 துறைவழக்குச் சொற்கள் சொல்வகையினைப் பொறுத்த மட்டிலும் பெயர்ச் சொற்களாக அமையும். செயல்நிகழ்வினைச் சுட்டும் வகையில் சில சொற்கள் வினையாக அமையப்பெற்றாலும் இவை பயன்பாட்டில் வினைவடிவங்களிலிருந்து ஆக்கப்பெற்ற பெயர்களாகவே செயல்படுகின்றன.

114 ஆங்கில மொழியில் துறைவழக்குச் சொற்கள் இரண்டு முதல் ஆறு சொற்களை உறுப்புகளாகக் கொண்டு அமையப்பெற்றுள்ளன. பெரும்பாலும் ஒரு மொழியிலிருந்து பிறிதொரு மொழிக்கு இச்சொற்களை மொழிபெயர்க்கும் போதுதான் இவை பல உறுப்புகளைக் கொண்டமையும். முதன்முதலில் அறிமுகம் செய்யும் நிலையில் துறைவழக்குச் சொற்கள் ஒரு சொல் வடிவினவாகவே அமையப்பெறும்.

தமிழிலுள்ள துறைவழக்குச் சொற்கள் பெரும்பாலும் ஒரு சொல்லினவாகவும் பிறமொழியிலிருந்து மொழிபெயர்க்கப் பெற்றவை மட்டுமே இரண்டு அல்லது மூன்று சொற்களைக் கொண்டவைகளாகவும் அமையப் பெற்றுள்ளன. இச்சொற்கள் அறிமுகம் செய்யப்பெறும் நிலையில் ஒருசொல் வடிவத்தினைக் கொண்டு இடுகுறிச் சொற்களாக (opaque words) அமைந்துள்ளன.

பிறமொழிகளிலிருந்து கடன்பெறப்பட்ட துறைவழக்குச் சொற்கள் மொழியாக்கம் செய்யப்பெறும் நிலையில்தான் பல சொற்களை உறுப்புகளாகக் கொண்டு இவை காரணச் சொற்களாக (transparent words) அமைகின்றன.

115 துறைவழக்குச் சொற்கள் பெரும்பாலும் குறிப்பிட்ட உரையாடல்களில் மட்டுமே இடம்பெறும். மேலும் இவற்றிற்குப் பதிலாகப் பொருளிணைச் சொற்களைப் (synonyms) பயன்படுத்துதல் இயலாது. ஒரு குறிப்பிட்ட கருத்தினைச் சுட்டுவதற்கு மட்டுமே துறைவழக்குச்சொற்கள் பயன்படுவதால் இவை குறியீடுகளாக (symbolic representations) அமையப்பெறுகின்றன

116 துறைவழக்குச் சொற்களின் பொருள்விளக்கம் இயல்பாக அமைவதில்லை. இவற்றின் விளக்கம் திணிக்கப்பட்ட ஒன்றாக (designational signification) அமையப்பெறும். இவற்றின் முழுமையான பொருளை விளக்கத்தின் (definition) வாயிலாகவே (Landau, 1984:20) அறிந்துகொள்ள முடியும்.

ஒரு துறைவழக்குச் சொல்லின் பொருளைப் பிறிதோர் துறைவழக்குச் சொல்லின் வாயிலாகவே விவரித்தல் இயலுமெனக் கருதுகின்றனர் (Haiman, 1980:340). இது முற்றிலும் பொருந்துமாறு அமையவில்லை. மேலும் விளக்கங்கள் (Pharaphrases) துறைவழக்குச் சொற்களாகக் கருதப்பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பிறமொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பெற்ற விளக்கங்களையும் தமிழில் சிலர் துறைவழக்குச் சொற்களாகக் கருதுகின்றனர்.

2.0 இங்குக் கூறப்பெற்ற செய்திகளிலிருந்து துறைவழக்குச்சொற்களுக்குக் கீழ்க்காணும் பண்புகள் காணப்பெறுகின்றன என்பதனைத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

2.1 துறைவழக்குச் சொற்கள் ஒரு குறிப்பிட்ட துறைக்கே உரியவை.

2.2 துறைவழக்குச் சொற்களின் முழுப்பொருளைத் துறைவல்லுநர்களால் மட்டுமே புரிந்து கொள்ளுதல் இயலும்.

2.3 துறைவழக்குச்சொற்கள் பொதுமொழிச் சொல்லுக்கு நேர்மாறானவை. இவ்வடிவங்கள் பொதுமொழியில் வரப்பெறினும் அவை துறைவழக்குச் சொற்களாகச் செயல்படுதலில்லை.

2.4 துறைவழக்குச் சொற்கள் உணர்த்தும் முழுமையான கோட்பாட்டினை இவை பொதுமொழியில் வழங்கப்பெறும் நிலையில் குறிப்பதில்லை. துறைவழக்குச் சொல்லினது கோட்பாட்டின் பயனாக்கத்தினைக் குறிக்கும் வகையில்தான் இவை பொதுமொழியில் கையாளப்பெறும் இந்நிலையில்தான் இவற்றை உருவகப்படுத்த இயலும்

2.5 துறைவழக்குச் சொற்கள் சூழலுக்கு அப்பாற்பட்டவைகளாக அமைந்து குறிப்பிட்ட உரையாடல்களில் மட்டுமே வருபவை.

2.6 துறைவழக்குச் சொற்கள் பெரும்பாலும் ஒருபொருள் ஒரு சொல்லாகவே அமையும். இவை பொதுமொழியில் கையாளப்பெறும் நிலையில் பலபொருள் ஒருசொல்லாகச் செயல்படும்.

2.7 துறைவழக்குச் சொற்கள் சுட்டும் பொருள் அவ்வத்துறைக்குரியது இப்பொருள் குறிப்பிட்ட சொற்களில் திணிக்கப்பெற்ற ஒன்றாகும். எனவே இவை உருவாக்கப்பெறும் நிலையில் இடுகுறிச் சொற்களாக அமையப்பெற்றுள்ளன.

2.8 துறைவழக்குச் சொற்களின் பொருளை விளக்கங்களால் மட்டுமே புரிந்திடல் இயலும் இவற்றைத் துறைசாரா மக்களால் முற்றிலுமாகப் புரிந்துகொள்ள இயலாது.

2.9 துறைவழக்குச் சொற்கள் பொருள் மாற்றம் அடைவதில்லை. இவை சுட்டும் கோட்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே பொருள் மாற்றம் நடைபெறும்.

2.10 துறைவழக்குச் சொற்களின் முழுப்பொருளையும் உள்ளடக்கப்பெறும் வகையில் உருவகப்படுத்துதல் இயலாது என்பதால் இவற்றை உருவகப்படுத்த முடியாது எனக் கூறலாம்.

2.11 துறைவழக்குச் சொற்கள் வழக்கிழந்து போவதில்லை. இவை தொடக்க நிலையில் உருவாக்கப்பெறும் மொழியில் இடுகுறிச்சொற்களாக அமையும். அவற்றைப் பிறமொழிகள் கடன்வாங்கி மொழிபெயர்க்கப்பெறும் நிலையில் காரணச்சொற்களாகவே அமையும்.

2.12 துறைவழக்குச் சொற்கள் இடுகுறிச்சொல்லாக அமையும் நிலையில் தனிச்சொற்களாகவும் கடன்பெயர்ப்பாக அமையும் நிலையில் காரணச் சொற்களாகவும் அமையப்பெறுகின்றன; காரணச் சொற்களாக அமையும்போது இவை பெரும்பாலும் இரண்டோ அன்றி இரண்டிற்கு மேற்பட்ட சொற்களுடனோ காணப்படுகின்றன.

சுருங்கக் கூறின் ஒரு குறிப்பிட்ட துறைக்கே உரித்தாகி ஒரு குறிப்பிட்ட துறையினரால் பயன்படுத்தப்பெறும் சொற்களைத் துறைவழக்குச்சொற்கள் எனக் கூறலாம்.

உடனுதவியவை

ஆதித்தன், ஏ.,	*கலைச்சொற்கள், மொழியியல் கருத்தரங்கு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1986.*
குழந்தைசாமி, வ.செ.,	*அறிவியல் தமிழ், சென்னை, 1985.*
சண்முகம், செ.வை.,	*அறிவியல் தமிழாக்கம், சென்னை, 1997.*
ராதா செல்லப்பன்,	*கலைச் சொல்லாக்கம், தஞ்சாவூர், 1985*
Bejoint, H.,	Monosemy in the Dictionary : Macro and Microstructural Aspects, Third EURALEX Conference (1988), pp.4-9.
Emberger, Hal,	Scientific Writing, Marcourt, New york, 1955.
Haiman, J.,	Dictionaries and Encyclopaedia, LINGUA 50 (1980), pp. 329-357.
Heltai, P.,	The Relationship between General and Scientific Vocabulary, EURALEX 2:2 (1985), pp. 1-3.

Landau, S., Of Matters Lexicographical Scientific and Technical Entries in American Dictionaries, American Speech 49, (1974), pp 13-24.

Picoche, J., Dictionaries, The Art and Craft of Lexicography, New york, 1984.

Ritcht, H., & Drasku, J., The Treatment of the Terminology of the Natural History in the Oxford English Dictionary, Dictionaries and their usages, pp.39-46, University of Exter, 1979.

Wierzbicka, A., Lexicography and conceptual Analysis, Ann Arbor, 1985.

சிங்கப்பூர்த் தமிழ்ப் புதுக்கவிதைகள் உள்ளடக்கம் - வெளிப்பாடு

அ.ர. சிவகுமாரன்

தமிழ்க்கவிதை இரண்டாயிரமாண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை உடையது. காலந்தோறும் உருவ உள்ளடக்க மாறுதல்களைக் கண்டது. இவ்வரலாற்றுப் போக்கில் இருபதாம் நூற்றாண்டின் முப்பதுகளில் தமிழ்ப் புதுக்கவிதைகள் தோன்றின. இப்புதுக்கவிதைகள் இலக்கண விதிகளுக்குக் கட்டுப்படாமல் சுதந்திரமாய் நடப்பன அந்த வகையில் அவற்றின் பாடுபொருள்களும் கட்டுப்பாட்டை மீறிய போக்கினைக் கொண்டுள்ளன. சிங்கையிலும் புதுக்கவிதை தோன்றி அதன் காலடிச்சுவட்டைப் பதிக்கத் தவறவில்லை சிங்கப்பூர் 1965ஆம் ஆண்டு மலாயாவிலிருந்து பிரிந்து குடியரசு நாடாயிற்று. சிங்கப்பூர் தனி நாடாகிய பின்பு 25 ஆண்டுகளில் பல மாறுதல்களுக்கு உள்ளாயிற்று எனவே அக்காலக்கட்டத்தில் எழுந்த புதுக்கவிதையின் பாடுபொருள்களைப் பற்றியும் அதன் வெளிப்பாடுகளைப் பற்றியும் நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிங்கப்பூர் குடியேற்ற நாடு. குடியேறிகள் தங்கள் தாய்நாட்டோடு தொடர்பு வைத்திருப்பார்கள். குடியேறிகளுடைய தாய் நாட்டின் மணம் சிங்கப்பூர் இலக்கியங்களில் வீசவே செய்கின்றது. புதுக்கவிதையிலும் இந்நிலையை நாம் காண்கிறோம்.

தமிழகத்தில் பாரதியாரால் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்ப் புதுக்கவிதை வடிவம் சிங்கப்பூரில் 1970 களின் இறுதியில் முகிழ்த்தது. இதனை '1930 களின் பிற்பகுதியில் தமிழகத்தில் ந. பிச்சமூர்த்தி வழிமுகிழ்த்த இப்புதுக்கவிதை வடிவம், இந்த நாட்டில் வேரூன்றுவதற்கு நாம் கிட்டத்தட்ட 40 ஆண்டுகள் பொறுத்திருக்க வேண்டியதாயிற்று'[1] என்னும் நா.கோவிந்தசாமியின் 1979 கூற்றிலிருந்து அறிய முடிகிறது. சிங்கையில் முதலில் புதுக்கவிதைகளுக்குத் தக்க வரவேற்பு இல்லை. தொடக்க நிலையில் மரபுக் கவிதைகளே செல்வாக்குப் பெற்றிருந்தன. இதனைச் "சிங்கப்பூர்த் தமிழ்க் கவிஞர்கள் புதுக்கவிதையில் நாட்டம் செலுத்தவில்லை; நாட்டம் செலுத்தாததோடு புதுக்கவிதை முயற்சியை எதிர்த்தனர்'[2] என்னும் வை. திருநாவுக்கரசின் (தமிழ்முரசு செய்தித்தாளின் முன்னாள் தலைமை ஆசிரியர்) கூற்றிலிருந்து அறியலாம். பிற்காலத்தில் சிங்கையிலேயே பிறந்து வளர்ந்த சிங்கை இளையர்கள் புதுக்கவிதை முயற்சிக்கு வித்திட்டனர்.

2002 ஆம் ஆண்டுவரை சிங்கப்பூரில் தமிழ்ப் புதுக்கவிதைகள் அடங்கிய 10 நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள், 1965 முதல் 1990 வரை வெளி வந்த நூல்கள் 9 ஆகும். அவை வருமாறு.

1979 விழிச்சன்னல்களின் பின்னாலிருந்து, க. இளங்கோவன்

1984 மௌன வதம், க இளங்கோவன்

1985 செந்தமிழ்க் கவியமுது, சித பழனிச்சாமி (இதிலுள்ள ஒரு புதுக்கவிதை மட்டுமே ஆய்வுக்கு உட்படுகிறது)

1988 Transcreations, க இளங்கோவன். (இதில் தமிழ்ப் பகுதி மட்டும் ஆய்வுக்கு உட்படுகிறது)

1989 முகவரிகள், க து. மு. இக்பால் (இதிலுள்ள 7 புதுக்கவிதைகள் மட்டுமே ஆய்வுக்கு உட்படுகின்றன)

1990 கவியோசை, ரவி

1990 சின்னச் சின்னச் சித்தாந்தங்கள், அமீருத்தின், வி எஸ். - தாஜீதீன், முகமது அலி, அழகிய பாண்டியன், ராஜசேகர் ஆகியோர்.

1990 நிஜத்தின் நிழல்கள், ஞானப் பிரகாசம் மொனிக்கா.

1990 நிசப்த ராகங்கள், குமாரி ஞானப்பிரகாசம் மொனிக்கா, சி. மீனாட்சி.

ஆகியன.

மேற்கண்ட கவிதைத் தொகுதிகளின் ஆசிரியர்களுள் க து.மு.இக்பால், சித.பழனிச்சாமி ஆகியோரைத் தவிர மற்ற கவிஞர்கள் இளைய தலைமுறையினரைச் சார்ந்தோர் ஆவர் இவ்விருவரும் மரபுக்கவிதைகள் எழுதுவதில் வல்லவர்கள் இவர்களைத் தவிர மேற்குறிப்பிட்ட மற்றவர்கள் மரபுக்கவிதை எதுவும் எழுதியவர்கள் அல்லர். இவர்களது கவிதைகளில் உள்ள பாடுபொருள்களின் வெளிப்பாடுகளை இனிக் காண்போம்.

புதுக்கவிதைகளின் உள்ளடக்கம்

புதுக்கவிதையின் பாடுபொருள் என்பது அப்பாடலின் தன்மையைப் பிரதிபலிப்பது. ஒரு நிகழ்ச்சியைப் பார்த்து அதன் பொருளைத் தன்போக்கில் உணரும் கவிஞன் அந்தப் பொருளைத் தன் அனுபவங்களுடன் இணைத்துத் தரும்பொழுது ஆழமான கவிதை பிறக்கிறது. எனவே, கவிதையின் 'உள்ளடக்கம், பொருள்' இவற்றின் ஆழ அகலமே அதன் பாடுபொருளாக அமைகிறது. "ஆழமாக உணர்ந்து அதை ஆழமாகவே உணர்த்திவிடுகிற கவிஞனின் திறன் வாழ்க்கையை நுட்பமாக அடையாளம் காட்டிவிடுகின்றது. இதுவே கவிதை" என வகுப்பர்.[3]

(பாலா, 1983) இக்கூற்று, உள்ளடக்கத்தின் மூலக் கூறான பாடுபொருளைப் பற்றியதாகும்.

பாடுபொருளைத் தேர்வுசெய்து வெளிப்படுத்துவதில் கவிஞனுக்கு முழு உரிமை உண்டு சிங்கப்பூர்ப் புதுக்கவிதைகள், கவிஞர்களின் வாழ்க்கைநிலைக்கு ஏற்பப் பாடுபொருள்களைக் கொண்டுள்ளன. அவை கவிஞனின் வாழ்க்கைநிலை, கவிஞனின் சமுதாயநிலை, கவிஞனின் உணர்வுநிலை என்னும் வகைகளில் அமைந்துள்ளன. அவற்றை

> *இயற்கை, மக்களின் வாழ்க்கைநிலை, காதல் / காதல்தோல்வி, கவிஞனின் தன்நிலை, சமுதாயம்,*

ஆகிய தலைப்புகளில் பகுத்துக் காணலாம்

இயற்கை

இயற்கையைப் பாடுவது பொதுவாகக் கவிஞர்களின் இயல்பு. மனிதன் ஒவ்வொருவனின் மனநிலையும், அவனை இயற்கையோடு ஒன்றச் செய்கிறது. ஆதிகால மனிதவாழ்க்கை காடுகளிலிருந்தும் குகைகளிலிருந்தும் தோன்றியதாகும். எனவே, காற்றை ஆடையாகவும், வானத்தைக் கூரையாகவும், காட்டை வீடாகவும் கொண்டு வாழ்ந்த ஆதிமனித மன உணர்வுகள், இயந்திர யுகத்தில் வாழும் சில மனிதனின் ஆழ்மனத்திலும் பதிந்திருக்க வாய்ப்புகள் உள்ளன. இதனைக் கவிஞர் இளங்கோவன் படைப்பில் காணமுடிகிறது.

'ஓர் அமாவாசையின் அரவணைப்பில்'[4] என்னும் கவிதை இயற்கையைப் படம்பிடிக்கின்றது. இதன் முதல் பத்தியில் கவிஞனின் கற்பனை இயற்கையோடு தொடர்புடைய காட்சிப் படிமமாக வந்துள்ளது. இதில் புகைசமிக்ஞை, மழைமொழி இரண்டையும் இணைத்து உள்ளடக்கத்தை வெளிப்படுத்தி இருப்பது புதுமையான கற்பனையாகும். சமிக்ஞைகளுக்கான உருவகமாகப் புகையைக் கவிஞர் பயன்படுத்தி உள்ளார் மேலும் 'இருள் மடல்' என்னும் கவிதையில் இரவு பற்றிக் குறிப்பிடும்போது இரவின் உணர்வுகளின் வெளிப்பாடாக

> ***விளக்குகளுக்கு***
>
> ***விளங்காத***
>
> ***மொழி***
>
> ***மனிதர்களுக்கு***
>
> ***விலங்கான***

வழி

வெளிச்சங்காண

இமைகளையறு நீ! [5]

என்று பாடுகிறார்.

மேலும் இளங்கோவனின் 'பார்வை' என்னும் கவிதையில் சூரியன் பாடுபொருளாகிறது[6] இக்கவிதை கதிர்விரிக்கும் சூரிய ஒளிகண்டு மயங்கி, எழுதப் பட்டுள்ளது. 'வானவில் ஓர் அறிமுகம்' [7] எனும் நெடுங்கவிதையில் வானவில்லைப் பூ விமானம் போட்ட வண்ணப்புகைப் பாதை, வர்ணஜாலப் பேனா, மேகநோயாளிக்குத் தரப்பெற்ற ஏழு மாத்திரைகள், தோரண வளைவு, மன்மதனின் மறுபிறவியாகிய மாயாவி, விண்ணில் வீசிய வளைதடி, காதற்படகு, பாலம், அம்புகள், மகுடம், ஏழு கோடுகள், வானத்தின் உடைந்த வளையல், வானப் 'புரொஜக்டரின்' ஊமைப்படம், வண்ணமடல், இலவசக் 'கலர்' விளம்பரம் எனப் பலவாறு அடுக்கிச் சொல்லுகிறார்.

மலர்களைப் பாடிட வந்த மொனிக்கா மலர்கள் கூற்றாகவே தமது கவிதையைப் புனைந்துள்ளார்.[8] மலர்களையும் பெண்களையும் ஒப்பிட்டு இருவருக்கும் ஏற்படும் முடிவுகளை நுணுக்கமாக எடுத்துக்காட்டி உள்ளார். இதன் மூலம் மலர்கள் பற்றிய தம் தனிப்பார்வையை முன் வைக்கிறார். கூண்டுக்கிளி தன் அவலத்தையும், ஆத்திரத்தையும் கூறுவது போலவும், ஆதவன் எழும்போது தாமரைகளும் சூரிய காந்தியும் மலர்வதால் 'நீ யாரைக் காதலிக்கிறாய்' எனக் கேட்டும், இயற்கையை மனித உணர்வுகளோடு தொடர்பு படுத்திப் பாடியுள்ளார் மொனிக்கா[9] மேலும் மழை பொழிவதைப் 'பிரசவம்' என உருவகம் செய்கிறார்.[10] க.து.மு. இக்பால் மேகத்தைக் கன்னியாக உருவகித்து அவற்றின் கனவுகளைக் கீழ்வருமாறு காட்டுகிறார்.

நட்சத்திர விலாசங்களைத்

தேடிப் புறப்பட்ட

மேகக் கன்னிகைகளின் பயணம்

பாதியில் நின்றுவிடும்

இனி அவை

மண்ணுக்குத் திரும்பப்

போவதில்லை .. ..

ஆயினும் .. ..

தங்கள் வண்ணக்கனவுகளை

சில நேரங்களில் அவை

வான வில்லாய்

வளைத்துக் காட்டும் .. ..! [11]

இயற்கையைப் பாடுவதில் மற்றொரு கோணம்

இயற்கையைப் பாடுதல் என்பது எங்கும் இருந்து வரும் இயல்பே. இயற்கையின் அழகில் கட்டுண்டு மகிழ்வதும், வெளிப்படுத்துவதும் வேர்ட்ஸ்வர்த், தாகூர், பாரதிதாசன் போன்ற எல்லாக் கவிகளிடமும் காணும் பண்பாகும் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் இந்த நிலை, சுற்றுச்சூழல் விழிப்புணர்வாகத் தழைத்து வருகின்றது எனினும், புதுக்கவிதையில் இயற்கையின் அழகில் மயங்குவதாகக் காட்டப்படுவதுகூட, கால நோக்கை மறக்கும் பண்பாகும். ஏனெனில், இயற்கையும் மனிதனும் ஒரே வர்க்கத்தால் சுரண்டப்படுகின்றனர். எனவே, இயற்கை ரசனையைப் பாடுவதை விட, இயற்கையோடு தொடர்புபடுத்தி மனிதன் சுரண்டுவதைப் பாடவேண்டியிருக்கிறது.

இந்த வகையில், ஈழத்தின் இனவாத அடக்கு முறையை எதிர்த்து ஞானப்பிரகாசம் மொனிக்கா கவிதை பாடுகிறார்.[12] அதில் ஒப்பிட்டு உருவகமாக இயற்கையைப் பாடுகிறார். ஈழப் போரின் அவலத்தை இக்கவிஞர் எடுத்துக்காட்ட முயல்கிறார் இக்கவிதையின் நோக்கம், இக்கவிதையில் நிலவு முதலிய இயற்கைப் பொருள்களைக் கண்டு கவிஞர் வியப்படையவில்லை. மாறாகத் தம் துன்பத்தை அவற்றின் மேலேற்றிக் கூறுகிறார். இக் கவிதையில், இயற்கை பற்றி எரிவதைப் போன்ற மாயத் தோற்றத்தை, மனித மனநிலை காட்டுவதாக அமைத்திருக்கின்றார். எனினும், இது காலப் பொருத்தமுடைய அறிவார்ந்த வெளிப்பாடாக அமைந்துள்ளது.

இளங்கவிஞராகிய அமீருத்தீன் இயற்கையைச் சற்று மாறுபட்ட கோணத்தில் பாடியுள்ளார். வானத்தைச் செல்வமிக்க பெண்ணாக உருவகிக்கிறார். அச்செல்வ வானப்பெண், பூமியில் இருக்கும் ஏழைகளை மோசம் செய்துவிட்டதாகக் குற்றஞ் சாட்டுகிறார் இவ்வகையில் அந்தக் கவிதை அமைந்துள்ளது. அக்கவிதையின் கருப்பொருள் வர்க்க உணர்வோடு கூடிய வெளிப்பாடாகத் தோன்றினாலும் இது வர்க்கபேதம் கொண்ட வெளிப்பாடு அன்று. ஒரு ஏழையின் ஏக்கம் போலக் கவிதை வெளிப்பட்டுள்ளது. நட்சத்திரம்

முதலான செல்வங்களைக் கொண்டு வானம் விளங்குகிறது அது ஏழையின் வறுமைத் துயரையும், இல்லாமையையும் கண்டுகொள்வதில்லை. எனவே, 'வானம் ஒரு மோசக்காரி' என்ற பொருளில் கவிதை அமைந்துள்ளது.[13]

பிற கவிஞர் படைப்புகளில் இயற்கை முதன்மை பெறவில்லை கவிஞர் இளங்கோவன் கடல், வான், கப்பல், அமாவாசை, மேகம், வானவில், நட்சத்திரங்கள், நிலா முதலிய இயற்கைப் பொருள்களைப் பாடு பொருளாக்கியுள்ளார் இயற்கைப் பொருள்களை வியத்தலும் ஒப்பிடலும் 'என்னும் விதங்களில் இவை இடம் பெற்றுள்ளன சி. மீனாட்சி உருவக அளவில் இயற்கையை ஆண்டுள்ளார். இயற்கையை நேரிடையாக அதிக அளவில் பாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

மக்களின் வாழ்க்கைநிலை

கவிஞன் தன் வாழ்க்கை நிலையையே பெரிதும் பாடுகின்றான். சில வேளைகளில் பிறர் அனுபவங்களைத் தன்னனுபவமாக்கிக் கொண்டும் பாடுகிறான் எனினும், சொந்த அனுபவத்தில் வெளிப்படும் கவிதைகள் சிறப்புக்கு உரியனவாகின்றன அந்தச் சொந்த அனுபவத்தையும் பொதுநிலையில் முன் வைக்கும்போது, கவிதைப்பொருள் பரந்துபட்ட பாடுபொருள் பின்னணியை உடையதாகின்றது

ஞானப்பிரகாசம் மொனிக்கா கவிதைகளில் மேற்கூறிய பரந்துபட்ட பாடுபொருள் பின்னணியைக் காணமுடிகின்றது. இவரின் 'வற்றாத அருவிகள்'[14] என்னும் கவிதை பெற்றோரையும் உறவினர்களையும் பிரிந்து பொருள் தேடச் சென்றவர்களின் மனநிலையை மொத்தமாக வெளிப்படுத்துகிறது உணர்ச்சி மேலிட அமைந்த இக்கவிதை ஒரு வகையில் நாட்டுப் புறப்பாடலின் ஒப்பாரிப் பாடல் தன்மையையும், அதற்குரிய உணர்வுகளையும் அடிநாதமாகக் கொண்டுள்ளது. அழுதல் என்ற சொல் பல முறை வந்து பாடலின் துயரத்தை மிகுதிப்படுத்துகின்றது இக்கவிதை, அணிகள் ஏதுமின்றி அமைந்துள்ளது. இதன் பாடுபொருள் பிரிவின் கொடுமையையும், பிரிந்தும் நோக்கம் நிறைவேறாத தன்மையையும், அவற்றால் ஏற்படக்கூடிய கூடுதல் அவலத்தையும் எளிமையாகத் தெளிவுறப் படம் பிடித்துக்காட்டுகிறது. அதே நிலையில், போலித்தன்மையாக அமைந்த ஒப்பாரிப் பாடலாகவும் விளங்குகிறது.

ஒப்பாரியில் போலித்தன்மை என்பது, துயரத்தை உணர்வு பூர்வமாக அனுபவிக்காமல், அறிவு பூர்வமாக நோக்கி, அறிவு பூர்வமாகவே வெளிப் படுத்துவது ஆகும் இதில் கண்ணீர் வரலாம். அந்தக் கண்ணீர், பாடல் நின்றதும் நின்றுவிடும் 'உலர்ந்துபோன விழிகளை எண்ணி அழுவதா' என்னும் தொடர்

அவள் அழவில்லை என்பதைக் காட்டுகிறது எனினும், அதிலும் துயர உணர்வு அறிவு பூர்வமாக இருக்கின்றது என்பதைக் காண முடிகின்றது.

இத்தகைய 'மக்களின் வாழ்க்கைநிலை' பற்றிய கருத்துகள் கவிஞரின் பல கவிதைகளில் இடம் பெற்றுள்ளன. மொனிக்கா ஈழத்திலிருந்து சிங்கப்பூருக்குப் பொருள்தேடும் நிமித்தமாக வந்தவர். எனவே, அவரது பாடல்களில் பொருள் தேட வெளிநாடு செல்லும் ஒவ்வொருவரின் வாழ்க்கைநிலையும் மனநிலையும் துல்லியமாக வெளிப்படுகின்றன தாயன்புக்கு ஏங்கும் நிலையைக் கீழ்வருமாறு கவிதையாக்கி உள்ளார்.

"உன் அரவணைப்பை மறந்து
வெறுமையுடனும் வறுமையுடனும்
போராட்டங்கள் தொடர்வதால்
வறுமைச் சுவர்களைத் தகர்த்தெறியக்
கடல்தாண்டி வந்தபோது நீ
சிந்திய கண்ணீரைக் கணக்கிட
வாய்ப்பில்லை. . . .

காற்றுடனும் கனவுகளோடும்
சில கணம் பேசுகின்றேன்
உன்னைப் பிரிந்து வாழவேண்டிய
காலம் நீட்டப்படுவதால்தான்
வறுமைச் சுவர்கள் இடிக்கப்படுகின்றன"[15]

என்கிறார். மற்றொரு கவிதையில்,

"இப்போதுதான்
தெரிகின்றது. . . .
தாண்டி வந்த திரைகடலைவிட
வாழ்க்கை ஆழமானது என்று"[16]

என்று குறிப்பிடுகிறார் இவ்வகையில், பொருள் தேடும் முயற்சியில் இழந்துவிட்ட

உறவின்பத்தை மொனிக்காவின் கவிதைகள் படம்பிடித்துக் காட்டுகின்றன. இப்பிரிவு அவர் உள்ளத்தில் பலமான காயங்களை ஏற்படுத்தியுள்ளது.

அதனால்தான், அவர்தம் கவிதைகளில் 'அழுகை' என்ற சொல் பல நிலைகளில் வெளிப்படுகின்றது. மேலும், துயர நிகழ்வுகளையே பெரிதும் பாடுபொருளாக்கியுள்ளார்.

'மக்களின் வாழ்க்கைநிலை' பற்றிய மற்றொரு செய்தி இளங்கோவன் கவிதையில் காணப்படுகின்றது 'விளக்குகள் எரிவது யாருக்காக?' என்னும் கவிதை ஒரு தாய் ஒரு குடும்பத்தை முன்னேற்ற அனுபவித்த சிரமங்களைக் காட்டுகின்றது.

> "நம்குடும்பச் சிலையைக்
> கண்டு . . . .
> புன்னகைக்கும் உதடுகள் . . .
> செதுக்கிய உன் விரல்களில்
> சிரித்த செந்நீரைச்
> சந்தித்திருந்தால். . . !
> அவை - திகைப்பின்
> பாதக் குறடுகள் ஆகியிருக்கும் ![17]

என்று தொடரும் கவிதையில் தாயின் சாதுர்யங்களைக் கூற வந்த கவிஞர் வார்த்தை ஜாலங்களில் மூழ்கிவிடுவதால், திடீரெனத் திசைமாறித் தாயின் கண்ணீர் பற்றிப் பேசுகிறார் இறந்தகால நிகழ்வாக அமையும் இக்கவிதை, மொனிக்காவின் தாயன்பு ஏக்கம் போன்ற பரிமாணத்தைப் பெறவில்லை. மக்களின் வாழ்க்கைநிலை பற்றிய பாடுபொருள், வாழ்க்கை நிகழ்ச்சி போல அமைந்துவிடுகிறது இத்தகைய போக்கினை முகமது அலி எழுத்திலும் காண முடிகின்றது.

காதல் / காதல் தோல்வி

தமிழிலக்கிய வரலாற்றில் சங்க காலம் தொட்டுப் புதுக்கவிதைக் காலம் வரை பாடுபொருளாகக் காதல் தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ளது. இது பற்றிக் கவிஞர் மீரா கூறிய கருத்துகளைக் குறிப்பிடும் சி இ மறைமலை,

> "புதுக்கவிதையில் காதற் கவிதைகள் எழுத ஊக்கமும், நாட்டமும் அளித்தது மீராவின் கனவுகள் + கற்பனைகள் = காகிதங்களேயாகும். 1971 இல் வெளிவந்த இந்நூல் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது, வசன

கவிதைகளிலே வார்க்கப்பெற்ற உள்ளத்தைத் தொடும் காதற்பாடல்களின் தொகுப்பு என்பதாலும், சமுதாய ஓர்மையுடைய உவமைகளைத் தேர்ந்து தக்க இடங்களில் பயன்படுத்தி, கூற வந்த கருத்துக்கு மெருகேற்றியிருக்கும் செம்மையான கட்டுமானத்திற்காகவும். . பக்குவமாகச் சிக்கலான காதல் தவிப்பை வழிப்படுத்தும் பாத்திறனுக்காகவும் இக்கவிதை நூல் போற்றப்பட்டது"[18]

என்கிறார். இந்நூல் தவறான விளைவுகளை ஏற்படுத்தி விட்டதாகவும் குறை கூறியுள்ளார். மீராவின் நூலால் இளங்கவிஞர் பலர் காதலி வழிபாடு, ஒருதலைக் காதல், ஏக்கம், தோல்வி என எழுதத் தொடங்கினர். இப்போக்கின் தொடர்ச்சியைச் சிங்கைப் புதுக்கவிதைகளிலும் காண முடிகிறது. தமது முதல்கவிதைத் தொகுதியையே,

"கனவுக் கரிபிடித்த
இதய வீட்டை
வெள்ளையடிக்க வந்து
கொள்ளையடித்துச்
சென்றவளின். . . .
நினைவாக"[19]

என ஒரு பெண்ணுக்காக அளித்துள்ளார் இளங்கோவன்.

"நாமாக விதை விதைத்து
நாமாக நீரூற்றி
நாமாகப் பேணி வளர்த்ததை
ஞான அபஸ்வரங்கள். . .
நாய்க்குடை என்றபோது. . .!
மௌன அரிவாளை
நறுக்கென்றெடுத்தது . . .
நாமாக இல்லையே?
நீயாக மட்டுமே!. . .
.. .. ..

நானேந்திய

இதயச் சுரபியில்

முதற்பிச்சையிட்டவளே!"[20]

என்று தொடங்கும் அவரது காதல் வெளிப்பாடு ஒன்பது பக்கம் நீண்டு ஏமாற்றத்தில் முடிகிறது இக்கவிதை, காதலியின் பிரிவைப் பற்றிய வருத்தத்தை வெளிப்படுத்தாமல் அமைகிறது. சங்க இலக்கியங்களில் 'இருத்தல்', 'இரங்கல்' என்ற உரிப்பொருள்கள் தலைவன், தலைவியிடையே ஏற்பட்ட இடைக்காலப் பிரிவுக்காக அமைந்தவை ஆனால், அவை காதல் பிரிவின் துன்பத்தைப் பாடுவன ஆனால் இளங்கோவன், காதலியைக் குற்றஞ்சாட்டுவதிலேயே கவனம் செலுத்தி உள்ளதை அவரது சொல் பிரயோகம் காட்டுகிறது

"துருவ நட்சத்திரத்தைத் தேடி. . . ." எனும் கவிதையில் காதற் சோகம்,

இச்சொற்றுளிகளைக் கொணரும்

பனி ஊதலுக்கு

கதவைத் திறப்பாயா?

நானும் குளிர்காய

கண்ணே . . . .

ஆன்மக் குழலில்

ஒரு முறை உரசிவிடு!

இல்லையேல். . .

தீ மூட்டலில் உருகி ஓடவிடு . . . .[21]

எனச் சற்றே ஆன்மச் சாயம் பெற்று முடிகிறது.

மொனிக்கா காதல் தோல்வி, விரக்தி, ஏக்கம், புலம்பல் எனப் பல கவிதைகள் புனைந்துள்ளார்.[22] இவை பொதுவானவை. பெண்ணின் உணர்வு நிலையில் நின்று இவர் காதலைப் பாடியிருப்பது சற்று வேறுபட்டதாகும்.

பாரெங்கும் பறந்து திரிந்து

பாசமெனும் இதயத்தைக் கண்டு

இனிய கீதம் இசைத்தேன்

பாதியிலே உனைக்காண மனமில்லையடி

எனப் பறைசாற்றினாயே . . . ஏன்?[23]

இப்பாடல் காதல் தோல்வி பற்றிக் காதலி நிலையில் நின்று வெளிப்பட்டுள்ளது; மேலும் அகப்பாடல் மரபின் தலைவி கூற்றை ஒத்துள்ளது.

சி மீனாட்சியின் கவிதையில் இயல்பாகக் காதலுணர்வு புலனாகிறது[24] எனினும் புலம்பல் வகைப்பட்ட கவிதையும் இவரிடம் உண்டு.[25]

'என் கல்லறைதான் உனக்குக் காணிக்கையா?' தாஜூதீனின் கவிதைத் தலைப்பே காதற் சோகத்தை வெளிப்படுத்துகிறது. மற்றொரு கவிதையில், வேல்விழிக் கன்னியரின் கூரிய பார்வையால் குத்தப்படும் இதயங்களின் ஓலத்தைக் காட்டுகிறார்.[26]

அழகிய பாண்டியன் தம் தெய்வீகப் புனிதக் காதலைப் பற்றி "என் பிரியத்திற்குரியவளே" என்னும் தலைப்பில் வெளிப்படுத்தியுள்ளார்.[27]

கவிஞர் மீராவின் "சிலநாட்கள் உன் கூடவே வருகின்றேன் பாதத்தில் ஒட்டியிருக்கும் செருப்பைப் போல" எனும் அடிகளை ஒட்டி, மு. மேத்தா, ரோகிணி மற்றும் சேவற்கொடியோன் ஆகியோர் கவிதை புனைந்துள்ளனர் என்பார்.[28] (சி.இ. மறைமலை, 1986) சிங்கைப் புதுக்கவிதைகளில் க.து மு இக்பாலும்[29] முகமதுஅலியும்[30] மீராவின் அடிகளை ஒட்டிச் சென்றுள்ளதை அவர்கள்தம் கவிதைகளில் காணமுடிகின்றது. நடப்பியல் சார்ந்த காதல் கவிதையொன்றையும் முகமது அலி இயற்றியுள்ளார். சமூகச் சூழலை உணர்ந்து காதலியிடமிருந்து விலகிக் கொள்வதை நாகரிகமாக,

"என் உணர்ச்சிகளுக்குத்

தீயினால்

திரை போட்டிருக்கிறேன்

உள்ளிருக்கும்

அற்புதத்தை

இந்த சமூகக் கரையான்

சூறையாடிவிடக் கூடாது

என்பதற்காக"[31]

என வெளிப்படுத்துகிறார்.

கவிஞன் தன்நிலை பற்றிப் பாடுதல் – தற்பெருமை

கவிஞர்கள் தம்மைத்தாமே புகழ்ந்து கொள்ளும்நிலையைச் சீட்டுக்கவி பாடல்களில் காணலாம். மகாகவி பாரதிகூடத் தம்புகழைத் தம் சீட்டுக்கவியில் கூறியுள்ளார். இப்போக்கின் அடிப்படையில் ஆனால் சற்று வேறுபட்டுத் தம்மைத்தாமே பறைசாற்றிக்கொள்ளும் போக்கை இளங்கோவனின் கவிதைகளில் காண முடிகிறது. இவரது முதல் தொகுதியின் முதல் கவிதை, இப்படித் தொடங்குகின்றது.

> **"நான் . . .**
>
> **மொழி அடுப்பை மட்டும்**
>
> **மூட்டி வைத்துக் கொண்டு**
>
> **தேச வரைபடத்தில்**
>
> **வார்த்தைக் கோடிட்டு**
>
> **கவிதைத் தளத்தில்**
>
> **காலூன்ற நினைக்கும்**
>
> **நொண்டியல்ல!"[32]**

எனத் தொடங்கும் க. இளங்கோவன், இதே வேகத்தில் சொற்களைக் கோர்த்துத் தம் சுயபலத்தைக் கூறிச் செல்கிறார். மௌனவதம் தொகுப்பில், 'கிஷ்கிந்தை' என்ற தலைப்பில்

> **"பூத்ததா ராத்திரி**
>
> **பூந்து விளையாடு நீ"**

என்னும் பாடல் நெஞ்சுக்குக் கூறுவது போலச் சூளுரையாக அமைந்தும், தோல்விகளையும் சோகத்தையும் எதிர்த்து முழங்கியும் அமைந்துள்ளது. மேலும்

> **"புறப்படு புறப்படு**
>
> **புரோமீதியஸ்ஸின்**
>
> **பூங்கனற் கரமே!"[33]**

என்று தன்னைத்தானே புகழ்ந்துகொள்வதுமாகவும் இப்பாடல் அமைகிறது. இப்பாடலில் இளங்கோவன் தேசத்து இருட்டைக் கொளுத்தப் புறப்பட்டதாகக் கூறுகிறார். இளங்கோவன், சிங்கைத் தமிழ்ப் புதுக் கவிஞர்களுக்கு முன்னோடி என்பதால், இத்தகைய பிரகடனங்கள் சிறப்பு இழக்கவில்லை எனலாம்.

ஞானப்பிரகாசம் மொனிக்கா, பரந்துபட்ட சிந்தனையைப் வெளிப்படுத்துகிறார்.[34] 'சின்னச் சின்னச் சித்தாந்தங்கள்' என்ற தொகுப்பில், இராஜசேகர் எழுதியுள்ள கவிதை இலட்சிய நோக்கில் அமைந்துள்ளது.[35]

இவர்களின் வழியில், வி எஸ். தாஜுதீன் கூறும் கருத்து யதார்த்த நோக்கைப் புலப்படுத்துகின்றது.

"எண்ணங்கள் துயில்
கொள்ளாமல்
கண்ணீர்த் துளிகள்
இங்கு
வடிக்கும் போது
இவை தீமை
சாஸ்திரத்துக்கே
சாவு அடிக்கும்"[36]

இக்கவிதையில் சமுதாய உணர்வு வெளிப்படுகின்றது. புதுக்கவிதைக்காரரின் பிரகடனங்களைக் கொண்டே, அவர்களது பிற்காலப் பாடுபொருளின் நோக்கை உணர்ந்து கொள்ள இயலும்

கவிஞர் ரவி, விநாயகர் வணக்கத்தைக் கவிதைத் தொகுதியின் முதலில் வைத்துள்ளார். புதுக்கவிதைக்காரர்கள் காலப்பொருத்தமற்ற சிந்தனைகளுக்குக் கவிதைகளில் இடம் தருவது, கவித்துவமற்ற பண்பின் வெளிப்பாடாக அமையும். ரவியின் புதுக்கவிதைகளில் காலப்பொருத்தமற்ற பழமைச் சிந்தனைகள் வெளிப்படுகின்றன. எடுத்துக்காட்டாக நூலின் தொடக்கத்தில் "கணபதி காப்பு, கணபதி துணை" முதலியையவை குறிப்பிடத்தக்கன.

காமம்

இலக்கிய வகைகளில் ஒன்றாகக் கருதப்படும் சிற்றிலக்கியங்களில் காமம் பேசப்படுவதுண்டு. கவிஞர் இளங்கோவன் கவிதைகளில் 'காமம்' காணப்படுவதைக் காணலாம்.

"கிழிந்த ரவிக்கைக்குள்ளே
தெரிந்தது பூமி உருண்டையென்று
மினிக்கவிதை சுடமுடியவில்லையென்றால். . ."[37]

"அழுவுலடி! சிரிப்புக்காட்டுறாண்டி!
சிரிச்சா எல்லாருக்கும் வருண்டி
சிரி நீருடீ! சிரிடி ! எனக்கும் வழியுது பாரு!"[38]

"இம்மத்தியானவெய்யிலில்
எவள் கற்பழிக்க தப்பு தப்பு . . .
எவள் காதலிக்க லாயக்கு?"[39]

"பிரா" விரிக்கின்ற
பேக்லேன் பொன்னம்மா"[40]

"வார்த்தை மதுனத்திற்கு
சிந்தனைவளமில்லையென்றால்
முஷ்டியே போதுமடா
கவிதை உனக்கெதற்கு?"[41]

இக்கவிதைப் பகுதிகள், இளங்கோவனது வித்தியாசப் போக்கினை வெளிப்படுத்துகின்றன இயல்பான இலக்கியப் படைப்பாளி பெண்களைப் பற்றிய முறையற்ற காமச் சித்திரிப்புகளைப் படைத்துக்காட்டுவதில்லை. இப்படிப்பட்ட போக்குகளைச் சிங்கைக் கவிஞர்களில் இளங்கோவனிடம் மட்டுமே காணமுடிகிறது

சமுதாயம்

கவிதை முதலான இலக்கியப் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தைப் பாடுபொருளாகக் கொண்டிருக்கின்றன. படைப்புகள் அனைத்தும் வாழ்க்கையின் வெளிப்பாடே. ஒரு கலைஞன், தன்னுடைய கோணத்தில் தன் படைப்பை வெளிப்படுத்துவதே கலையின் தனித்தன்மை அத்தனித்தன்மையும் சமுதாய நிலையின் பாதிப்பைப் பெற்றதாகவே பெரும்பாலும் அமையும். கலைவெளிப்பாடு சமுதாய நிலையை வெளிப்படுத்த முயலாத நிலையில், அது வெற்றுக் கற்பனையாக அமைகிறது. இத்தகைய வெற்றுக் கற்பனைகளைக் கொண்ட படைப்பாளி, சமுதாயத்தின் பிடியிலிருந்து விலகியவன் ஆகிறான். எனவே, எந்த அளவில் ஒரு படைப்பு, சமுதாயத்தோடு தொடர்பு உடையதாகின்றதோ, அந்த அளவில் அது சமுதாயத்தால் வரவேற்கப்படுகின்றது. இவ்வகையில் சிங்கப்பூர்ப் புதுக்கவிதைகளில் சமுதாயத்தின் வெளிப்பாடுகளைக் காணமுடிகின்றது

வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு மேற்கொண்ட பணிக்கும், கவிதையுணர்வுக்கும் இடையிலான மோதலை இளங்கோவனின் கவிதை வெளிப்படுத்துகின்றது.

'சமுதாயக் கட்டிடத்தின்

பிரச்சனைச் சன்னல்களை

திறந்து பார்ப்பது

இருட்டின் கைகள்தாம்.

விளக்கேற்றப் போகிறாயோ

இலக்கியத் தீப்பொறியால்?

வேடிக்கை பார்க்காமல்

வீண் வம்பெதற்கு?"[42]

என்கிறார் 'சுதந்திரம்' பற்றிய அவரது கவிதை, உண்மைச் சுதந்திரம் தேடுவோரின் அவலத்தை வெளிப்படுத்துகிறது.[43] பொதுவாக இளங்கோவனின் கவிதைகளில் சமூகம் பற்றிய குறைகூறுதல் மிகுதியாக உள்ளது.

சமுதாயத்தால் ஒதுக்கப்படும் 'சமூக சேவகன்', போதையின் கேடு, வறுமையின் கொடுமை, சமூக விரோத அரட்டையர்கள், போலியான பக்தர்கள், மேட்டுக் குடியினரின் வஞ்சகம், மத, அரசியல் ஆதிக்கப் போக்கு, தீயவராய் வாழும் மனிதர்கள், அடுக்கு மாடிகளில் பெரிய வீடுகளில் வசிக்கும் மாந்தர்களின் மனித நேயமற்ற போக்கு, முதலிய பலவும் இவரது கவிதைகளில் சாடலுக்கு உள்ளாகின்றன [44]

'மராபிமானம்' எனும் கவிதையில் மதவாத, சுயநல அரசியல் சக்திகளைச் சாய்க்க இறைவனே இயந்திரத் துப்பாக்கியோடு வரவேண்டும் எனக்கூறி முடிவில் அடைப்புக் குறிக்குள்,

"ஆமாம்: நானென்ன செய்வேன்?

தொடை காட்டும் குட்டியெவளும்

தொலைக் காட்சியில் உண்டாவென

திரும்பிப் பார்ப்பேன்"[45]

எனும்போது சமூக இழிவைக் கண்டு வாளாவிருப்போரின் போக்கு சாடப்படுவதைக் காணலாம்.

இதயங்களைக் கொலை செய்பவர்களைச்

சட்டம் தூக்கிலிடுமேயானால்

உலகில் ஒருசிலரே மிஞ்சியிருப்பர்[46]

எனும் மொனிக்காவின் வரிகளிலும் சமூகம் பற்றிய அவநம்பிக்கையே வெளிப்படுகிறது ஏழைகளின் இரங்கத்தக்க நிலை, சாதி இழிவு, ஒழுக்கங்கெட்ட ஆடவரால் அவர்தம் மனைவியர் படும்பாடு, ஒழுக்கங்கெட்ட பெரிய மனிதர்களின் வெளிவேடம், குடும்பத் தலைவனின் மதுப் பழக்கத்தால் விளையும் கேடு ஆகியவற்றை மொனிக்கா அனுதாபத்துடன் கவிதையாக்கியுள்ளார்[47] இவற்றுள் மதுப்பழக்கத் தீமை குறித்த கவிதை சொந்தத் தந்தையால் நேர்ந்த அநுபவங்களின் விளைவெனத் தோன்றுகிறது.

மொனிக்காவிடம் உலகளாவிய போரற்ற அமைதியான வாழ்க்கை குறித்த விழைவு மேலோங்கிக் காணப்படுகிறது.[48] இலங்கை இனப் போராட்டம் இவரது கவிதைகளில் பல நிலைகளில் வெளிப்படுகிறது; உலக அமைதியை விரும்பும் சமாதானப் புறாவாக இவர் இருக்கிறார். ஈழத் தமிழர்களின்நிலை பற்றி

"ஒரேயொரு முறை திரும்பிப் பாருங்கள்

ஒரு தீவு எரிகின்றது! . . . . .

எரிகின்ற தீவை அணைத்திட உங்கள் விழிகளிலிருந்து

ஒவ்வொரு துளிக் கண்ணீர்! . . . .

கண்ணீரை இரவல் கேட்கின்றேன்"[49]

என்று கூறுகிறார். ஈழப் பிரச்சனைக்கு ஆதரவு திரட்டும் தொனியை இக்கவிதையிலிருந்து அறிய முடிகின்றது.

சமயப்பற்று இல்லாத சமுதாயத்தை எண்ணி வருந்திப் பாடுகிறார் ராஜசேகர். மேலும் சிங்கைத் தமிழரின் தனித்த அடையாளங்களில் இந்து மதங்கள் உணர்த்தும் உட்பொருளைத் தொலைத்துவிட்டு நிற்கும் தன்மையும் ஒரு கூறாகக் கண்டெடுக்கப்படுவதை வெளிப்படுத்தியுள்ளார்.

"ஐம்பதுகளின்

திராவிட

விழிப்பு வேள்வியில்

ஆகுதி விட்டவர்கள்

இன்று
இந்து மதம் ஊட்ட
இம்சைப்படுகிறார்கள்
ஏனெனில்,
அது
அவர்களுக்குத் தெரியாது"

எனத் தொடக்கும் கவிதை,

'ஆலமர வேர்
அநியாயமாய்
இளைத்து வருகிறது'

என முடிகிறது. எண்பதுகளில் இந்து மதம் பள்ளிப் பாடங்களில் ஒன்றாக விளங்கியது. இப்பாடத்தைச் சரியான முறையில் பள்ளி ஆசிரியர்கள் போதிக்கவில்லை என்று மனம் வருந்திக் குறிப்பிடுகிறார்.

க.து.மு.இக்பால் பாலத்தீன விடுதலைப் போராளிகளைக் குறித்தும்,[50] மறைந்த பிலிப்பீன்சு எதிர்க்கட்சித் தலைவர் அக்கீனோவின் நினைவாகவும் கவிதைகள் புனைந்துள்ளார்.

"இமைகளை மூடியதால்
ஒரு சமுதாயத்தை விழிக்கச் செய்தவனே
அக்கினோ. . . . . .
உன் உயிரின் கனவை
உன் மரணம் நிறைவேற்றி விட்டது"[51]

எனும் அவருடைய கவிதை வரிகள் முரண் உத்தியால் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றன.

நடுத்தர வகுப்பாரின் (Middle class) ஊசலாட்ட நிலையை உருவக அடுக்குகளில்[52] உணர்த்தியுள்ளார் முகமது அலி. இரக்கமற்ற மனிதர்களை எண்ணி வேதனைப்படுகிறார் ராஜசேகர்.[53]

"பெண்ணுரிமை", "பெண்ணியம்" முதலிய உணர்வுகள் மேலெழுந்துள்ள தற்காலத்தில் சமுதாயத்தில் பெண்கள் நிலை பற்றிய பார்வைகளைப் புதுக்

கவிதைகள் முன்வைக்கத் தவறவில்லை. பெண்கள்பால் அனுதாபமுள்ளவர் போல் நடந்து கொள்ளும் ஆடவரும், மக்கள் தொடர்புச் சாதனங்களும் (Mass Media) பெண்களைப் போகப் பொருளாகவே கருதுவதை இளங்கோவன் தமக்கேயுரிய பாணியில், சுட்டிக்காட்டுகிறார்.[54] மொனிக்கா

"ஆண்மகன் நீ வாழப்போகிறவளிடமே

வாழ்வதற்குக் கூலி கேட்கும்

கலிகாலமிது"[55]

என வேதனையாகக் கூறுகிறார்.

அமீருத் தீனின் இரு கவிதைகள் பெண்விடுதலை பற்றியனவாக உள்ளன. "வாருங்கள் வெளியேறி விடுவோம்" என்று தொடங்கும் "புதுமைப் பெண்கள்" எனும் கவிதை,

"நம்மைப் பிணங்களாக்கும்

இந்த ஆண் வர்க்கத்திடமிருந்து,

மரண மைதானத்தில்

வாழ்க்கைப் பயிர்களை மேய

வாருங்கள் வெளியேறி விடுவோம்!"[56]

எனத் தீவிரப் பெண்ணியக் குரலோடு முடிகிறது. மற்றொரு கவிதையான "கணவன்" என்னும் கவிதையில்,[57] ஆணாதிக்கச் சமூகத்தை எச்சரிக்கிறார் முகமது அலி

சமூகத்தில் குடும்பம்

சமூகம் பற்றிய பல கவிதைகளினிடையே நட்பு, குடும்ப உறவு முதலியன பற்றிய சில கவிதைகளும் காணப்படுகின்றன. இளங்கோவனின் "விளக்குகள் எரிவது யாருக்காக?" எனும் கவிதை, நண்பன், காதலி, தாய், தந்தை முதலியோர் பற்றிக் கூறுகிறது

தம் குடும்பத்தின் மூன்றாம் தலைமுறையின் தொடக்கமாகப் பிறந்த குழந்தையை வருணித்தும் வாழ்த்தியும் புதுக்கவிதை புனைந்த அழகிய பாண்டியன்,

"வாழ்க்கை என்பது

வாழ்ந்து பார்க்க வேண்டிய வித்தை;

தீர்த்துப் பார்க்க வேண்டிய பிரச்சினையல்ல!"[58]

எனும் வாழ்வியல் பார்வையோடு முடிக்கிறார்

குடும்பத் தலைமை ஏற்றிருக்கும் தந்தை பற்றிய படிமமும் இளங்கோவனிடம் நன்கு வெளிப்படுகிறது.

"தத்துவார்த்தத்தின் தோளில். . . .
சமயங்களில் அமரும்
உமது மனவேதாளம்;
பெரும்பாலும் போய்த்திரும்பாமல்
சின மரங்களில்
தொற்றிக் கொள்கிறது"[59]

என்பது படிமம் அடங்கிய செறிவான பகுதி.

மொனிக்காவின் "அம்மா"[60] எனும் கவிதை, தாய்க்காக ஏங்கும் மகளின் ஏக்கத்தைப் பிரதிபலிக்கிறது கடல் கடந்து வேறு நாட்டிற்குச் சென்ற மகள் தாய்க்காக ஏங்கும் ஏக்கத்தைக் கவிதை நன்கு உணர்த்துகிறது.

மற்றொரு கவிதை, ஒவ்வொரு கட்டத்திலும் தாயோடு மகள் கொண்ட மென்மையான அன்புணர்வை வெளிப்படுத்துகிறது.[61]

தந்தையின் நினைவில் ஏங்கும் மகளின் உணர்வை, சி. மீனாட்சி,

"சோகங்கள்
அலைக்கழிக்கும் போது
வேதனைகளை மறந்து
கண்ணுறங்க
உன் மடியில்லையே!"[62]

என வெளிப்படுத்துகிறார்.

தாய் பருவந்தோறும் தன் மகளைப் போற்றி வளர்க்கும் பாங்கை மகள் தாயாகிய பின் உணர்வதாகக் காட்டும் ராஜசேகரின் கவிதை எளியது; நயமானது[63] ஒரு தாய் தன் மகளை எண்ணி மகிழ்வதாய் அமைந்த மீனாட்சியின் கவிதை "என்மகள்" என்பதாகும். இக்கவிதை புதுமை ஒன்றும் இல்லை. இயல்பாக உள்ளது.[64] முதிய தாயொருத்தி தன்னைப் பேணாத மகளை எண்ணி அழுவதை,

"இன்று என் முதுமை
உனக்குச் சுமையோ

என்னை நீ சுமக்கவில்லையோ!
முதியவள் என்றா
என்னை முதியோர் விடுதியில்
தாரை வார்த்துக் கொடுத்தாய்?
அன்று உனக்காகச் சிரித்தேன்
இன்று உனக்காக அழுகிறேன்"[65]

என்று துக்கம் தொனிக்கச் சொல்லோவியம் ஆக்கியுள்ளார் மொனிக்கா.

சிங்கையின் தமிழ்ச்சமுதாய வாழ்க்கைப் போக்கைக் கீழ்வருமாறு வெளிப்படுத்துகிறார் இளங்கோ

"காலையில் மண்வெட்டி
ஆரோகணித்தது போக,
*மாலையில் 'ஓராங்துவா'**
உடன் படிக்கையில்
'கைநாட்டு' போடும்
பொல்லாக் கழுதைகள்
கழுத்தை நெரிக்கலாமா?

வேண்டாம்!
வேடிக்கை பார்ப்பவர்
மனங்களில் . . . .
குடிகாரப் பரம்பரையெனக்
குத்திக்காட்டி. . . .
நம் மதிப்பின் உயர்வுக்கு,
நாகரிகமாய் ஒத்தடம் கொடுப்போம்!"[66]

**("ஓராங் துவா"- மிக மட்டமான சீனச்சாராயம்)* மேற்கண்ட கவிதை, சிங்கப்பூர்த் தொழிலாளர்களில் சிலர் காலையிலிருந்து கடுமையாக உழைப்பதைக் காட்டுகிறது மேலும் அவர்கள் 'ஓராங்துவா' மதுவகையில் கொண்டுள்ள

நாட்டத்தையும் புலப்படுத்துகின்றது. இக்கவிதை மதுவுக்கு அடிமையாவதைக் கண்டிக்கின்றது.

ரவியின் 'சிங்கைக்கு வந்த தமிழன்'[67] என்னும் கவிதை, சிங்கைக்குத் தமிழர் கூலிகளாகக் குடியேறிய வரலாற்றைக் கோடிட்டுக் காட்டுகின்றது. தங்கள் வறுமையைப் போக்கி, வளமாக வாழத் தமிழர்கள் சிங்கைக்குக் குடியேறினர் என்றும் சிங்கை வந்த நிலையில் கண்காணிகள் (Agents) அந்தத் தமிழர்களைச் சுரண்டினர் என்றும், பின்னர்த் தமிழர்கள் உழைத்து முன்னேறினர் என்றும் இக்கவிதையில் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

சமுதாய விமர்சனம்

"மனிதனே படைத்துக் கொண்ட
சாக்கடைச் சாதிகளுக்கு
அவன் பொறுப்பல்ல"[68]

என்ற மொனிக்காவின் கவிதை, சாதிக்குக் கடவுள் பொறுப்பல்ல என்று கூறுகிறது. 'விரயங்கள்'[69] என்னும் ராஜசேகரின் கவிதை சிங்கைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு அறிவுரை கூறுகின்றது. குடும்ப விழாக்களில் பணம் வாரி இறைக்கப்படுவது பற்றி இக்கவிதை கூறுகின்றது. மேலும், சேமிக்கும் பணத்தைச் சிங்கை இளைஞர்களின் கல்விக்காகச் செலவிடவேண்டும் என்ற வேண்டுகோளையும் மறைமுகமாக முன் வைத்து மக்கள் மீதான அனுதாபத்தைப் புலப்படுத்துகின்றது.

'ஒலிகுண்டு',[70] என்ற இளங்கோவனின் கவிதை, சமுதாயப் பாடகனின் சங்கீதத்தைச் சமுதாயத் தலைவர்கள் புறக்கணித்துவிடுகின்றனர் என்னும் கருத்தை மௌனமாய் வெளிப்படுத்துகின்றது.

சிங்கைவாழ்த் தமிழர்களைக் கடுமையாக விமர்சிக்கும் போக்கை இளங்கோவன் கவிதையில் காணமுடிகின்றது.

"தமிழனைப் பார்த்தால்
தமிழ் நலமாவென்று
தலைநிமிராமல் கேட்கணும்!
தமிழச்சியைப் பார்த்தா?
சரக்கு 'சைஸ் என்னான்னு
நைசா மோதணும்!
. . .

"எழுத்தாளர் சீ. வாயும், சைக்கிலனும்

சும்மா சும்மா கனவுல வர்றாங்க. . . .!

நெறைய சேறுகதை வரங்கொடுக்குறாங்க. . . .

"தேக்கா பசாருல" தேவதை யொருத்தி

தூக்கிக் காட்டியதால் துர்மரணமுற்ற

மறத்தமிழனைப் பத்தி பத்தியா

சூடாக் கதை ஆத்தியிருக்குறன். . .

. . .

"தமிழ் டிராக்டர் கணுணானினியும்"

எடுத்த வாந்தியில் நீந்தி வளர்ந்தவனின்

செத்தத் தமிழை செத்தநேரம் செவிமடுத்து

ஓடியாந்து புத்தகம் வாங்குங்கோ

. . . .

சிங்கைத்

தமிழுக்கு நெறிகட்டுனாச் சரிகட்டுற

தலைவரு

தம்மகளைக் கட்டிக் கொடுக்க

தமிழகம் போறாரு. . . .

. . .

"கமகமன்னு தமிழ் மணம் வீச. . . .

"கன்னித் தமிழா, கர்ப்பிணித் தமிழான்னு"?

கவியரங்கம் கூட்டட்டுங்களா!

காக்காக் கவிஞனுங்க ஷோக்காப்

பாடுவானுங்க சார்!

மாதவிக்கு மாதவிலக்கு!

கண்ணகிக்கு என்ன கணக்குன்னு

மணிக்கணக்காப் பேசுவாணங்க சார். . . .!

"ஓராங் துவா" வாங்கிக்கொடுத்தா

போதுங்க சார்

தமிழன்னையையே அவுத்துடுவானுங்கசார்!" [71]

இக்கவிதையில் சிங்கப்பூர்த் தமிழர் சிலரின் போலித்தமிழ் உணர்வும், ஒழுக்கமும் கடுமையாகச் சாடப்படுகின்றன இப்படிப்பட்டக் கவிதைகளை இளங்கோவன் மட்டுமே பாடியுள்ளார். இது இவரது தனிப்பட்ட பார்வையாக விளங்குகிறது. இளங்கோவன் சிங்கைப் புதுக்கவிதைகளில் பலதரப்பட்ட கோணங்களில் தமது பார்வையைச் செலுத்திப் பல நிலைகளில் பாடல்கள் பாடியுள்ளார். இவரிடம் சமுதாயத்தைச் சாடிடும் போக்கே அதிகமாக உள்ளது. அதற்கான தீர்வுகள் இல்லை.

சிங்கப்பூரின் புதுக்கவிதைகளின் உள்ளடக்கதைப் பற்றிக் குறிப்பிடும் போது கீழ் வருவனவற்றைச் சுட்டலாம்.

சிங்கப்பூருக்கே உரிய பாடுபொருளாக விளங்குபவை மிகக் குறைவே. சிங்கப்பூர் நாடாளுமன்ற உறுப்பினரைப் பற்றிப் பாடும் அரசியல் பாடலும் சிங்கப்பூர்ச் சமுதாயத்தைப் பற்றிப் பாடும் பாடல்களுமே சிங்கப்பூருக்கே உரிய பாடுபொருள்களாகும்.

சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியங்களில் அரசியல் தொடர்பான செய்திகள் இடம்பெறுவதில்லை. அப்படி இருக்கையில் இளங்கோவன் நாடாளுமன்ற உறுப்பினரைக் குறித்துப் (குத்திக் காட்டி) பாடல் இயற்றி இருப்பது சுட்டத்தக்கது.

சிங்கப்பூருக்கே உரிய சமுதாயப் பிரச்சினைகளை இளங்கோவன் கூறியுள்ளார். சிங்கப்பூரில் மலாய் இனத்தவர் தங்கள் மதத்திற்காக மாதாமாதம் நன்கொடை வழங்குகிறார்கள். ஆனால் இந்து மதத்தவர் அவ்வாறு செய்வதில்லை. அவர்கள் அனைவரையும் கட்டாயப்படுத்தினால் அவர்கள் செய்ய முன்வரமாட்டார்கள் என்று குறை கூறுகிறார். சிங்கப்பூர்ச் சமுதாயப் பிரச்சினையை முன்வைத்துப் பாடும் இளங்கோவனின் சில பாடல்கள் சிங்கப்பூருக்கே உரிய பாடுபொருளைக் கொண்டவை மராபிமானம், எங்கிருந்து இன்றானாய்? முதலிய பாடல்கள் இருண்மை நிறைந்த பாடல்களாக அமைந்து பாடுபொருளை வெளிப்படுத்துவதில் இறுக்கத்தை ஏற்படுத்துகின்றன.

மொனிக்காவின் பாடுபொருள் குடும்பம், காதல், மன உளைச்சல் ஆகியவற்றைச் சுற்றி வருவதோடு ஈழத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. தம் பாடுபொருளை ஈழப் பிரச்சினைகளின் அடிநாதமாக விளங்கச் செய்பவர் இவரும் மீனாட்சியுமே ஆவர். இவ்விருவருள் மொனிக்காவே கூடுதலாய்ப் பாடியுள்ளார். ரவியின் புதுக்கவிதைகளில் பாடுபொருள்கள் மேலோட்டமாகவே சித்திரிக்கப்பட்டுள்ளன.

முடிவுரை

1 இளங்கோவன் தற்காலச் சமூக நம்பிக்கைகள், நடப்புகள், போக்குகள், உளவியல் சிக்கல்கள் ஆகியனபற்றித் தமக்கேயுரிய, அதிர்ச்சிதரத்தக்க, அழுகுணிவாதப் பார்வை கொண்டு பெரும்பாலான கவிதைகளைப் படைத்துள்ளார்.

2. கவிஞனின் மன உளைச்சல் இளங்கோவன் கவிதைகளின் தன்னிரக்கப் பாடுபொருளாக வெளிப்படுகின்றது. கவித்துவத் தற்பெருமை இளங்கோவனின் கவிதைகளில் தந்நிலைப் பாடுபொருளாகின்றது. காமவுணர்வு இளங்கோவனின் கவிதைகளில் வெளிப்படுகிறது.

3. சிங்கைத் தமிழ்ச் சமுதாயத்தைக் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாக்கியுள்ள நிலை, இளங்கோவன் கவிதைகளில் மட்டுமே காண முடிகின்றது.

4. சிங்கை வாழ் தமிழர்களின் வாழ்க்கையை விமர்சிக்கும் போக்கில் சாதி, மதம், அரசியல், தமிழுணர்வு, பிறவாழ்க்கை முறைகள் அனைத்தும் விமர்சனத்திற்கு உள்ளாக்கப் பட்டுள்ளன.

5. இளங்கோவன், சிங்கப்பூர் மண்ணின் மணம் கமழுகின்ற கவிதைகளை யாத்திருக்கிறார்; மொழிநடை, வடிவம், பாடுபொருள்களில் வித்தியாசத்தன்மை இவரது பாடல்களில் காணப்படுகின்றது. தாம் தமிழில் எழுதிய கவிதைகளைத் தாமே ஆங்கிலத்திலும் எழுதி "Transcreations" என்னும் பெயரில் வெளியிட்டுள்ளார். இப்படிப்பட்ட வகைமை வளத்தை (Variety) இளங்கோவன் கவிதைகளிலேயே காண முடிகிறது சிங்கைத் தமிழ்ப் புதுக்கவிதை உலகில் இளங்கோவன் தனித்து நிற்கிறார்.

6. இலங்கைத் தமிழர்பால் அனுதாபம் கொண்டுள்ள மொனிக்காவின் கவிதைகளில் பெரும்பாலும் அவலவுணர்வு இழையோடுகிறது.

பிழைப்புக்காக வெளிநாடு செல்வோரின் வாழ்க்கைநிலையும், மனநிலையும் இவரது கவிதைகளில் தெளிவாக வெளிப்படுகின்றன.

7. அமீருத்தீன், தாஜுதீன், முகமது அலி, அழகிய பாண்டியன், ராஜசேகர் ஆகிய இளையோர் ஐவரின் கவிதைத் தொகுப்பு முகவுரையில் உள்ள, "பனிக்கட்டியின் கூர்முனையைத்தான் நீங்கள் காண்கிறீர்கள். நீர் மட்டத்திற்குக் கீழ் ஒரு பிரம்மாண்டமே தன் உதயத்திற்காகக் காத்து நிற்கிறது"[72] என்பதையே மதிப்பீடாகக் கொள்ளலாம். உதயமாகப் போகும் பிரம்மாண்டத்தை எதிர்பார்ப்பது நன்னம்பிக்கை. இவர்களது கவிதைகள் முதல் முயற்சிக் கவிதைகளே.

8. சீன, மலாய்ச் சூழலில் வாழும் சிங்கைத் தமிழ்க் கவிஞர்கள் அம்மொழிகளின் புதிய கவிதை முயற்சிகளையும் உள்வாங்கிக் கொண்டு கவிதை படைப்பார்களாயின் தமிழக, ஈழப் புதுக் கவிதைகளினின்றும் வேறுபட்ட தனிப்போக்கிலான சிங்கைத் தமிழ்ப் புதுக்கவிதைகள் கிடைக்கும்.

அடிக்குறிப்புகள்

1. கோவிந்தசாமி, நா. பின்னுரை, விழிச்சன்னல்களின் பின்னாலிருந்து. ப.109.
2. திருநாவுக்கரசு, வை. முன்னுரை Anthology of ASEAN Literature, The Poetry of Singapore. p. 138.
3. பாலா, புதுக்கவிதை ஒரு பார்வை. ப.93.
4. இளங்கோவன், க. விழிச்சன்னல்களின் பின்னாலிருந்து. ப.85-86.
5. இளங்கோவன், க. மௌனவதம். ப.36.
6. இளங்கோவன், க. விழிச்சன்னல்களின் பின்னாலிருந்து. ப.9
7. இளங்கோவன், க விழிச்சன்னல்களின் பின்னாலிருந்து. ப 28.
8. ஞானப்பிரகாசம் மொனிக்கா
9. ஞானப்பிரகாசம் மொனிக்கா, மீனாட்சி, சி. நிசப்த ராகங்கள். ப.22-23;56.
10. ஞானப்பிரகாசம் மொனிக்கா, நிஜத்தின் நிழல்கள். ப11.
11. இக்பால், க.து.மு. முகவரிகள். ப.127.
12. ஞானப்பிரகாசம் மொனிக்கா, நிசப்த ராகங்கள் ப.62.

13 அமீருத்தீன் முதலியோர், சின்னச் சின்னச் சித்தாந்தங்கள். ப 20.

14 ஞானப்பிரகாசம் மொனிக்கா, நிஜத்தின் நிழல்கள். ப 19-20.

15. ஞானப்பிரகாசம் மொனிக்கா, நிஜத்தின் நிழல்கள். ப 21.

16 ஞானப்பிரகாசம் மொனிக்கா, நிஜத்தின் நிழல்கள் ப 22.

17 இளங்கோவன், க. விழிச்சன்னல்களின் பின்னாலிருந்து ப.68.

18 மறைமலை, இ சி புதுக்கவிதையின் தேக்க நிலை ப.57-58.

19 இளங்கோவன், க விழிச்சன்னல்களின் பின்னாலிருந்து. ப.5.

20 இளங்கோவன், க விழிச்சன்னல்களின் பின்னாலிருந்து. ப 64-65.

21 இளங்கோவன், க மௌனவதம். ப.16

22 ஞானப்பிரகாசம் மொனிக்கா, நிஜத்தின் நிழல்கள். ப.10,35,41,43,54,57.
ஞானப்பிரகாசம் மொனிக்கா, மீனாட்சி சி. நிசப்த ராகங்கள்.
ப 44,45,58

23 ஞானப்பிரகாசம் மொனிக்கா, நிஜத்தின் நிழல்கள். ப.72

24. ஞானப்பிரகாசம் மொனிக்கா, மீனாட்சி, சி. நிசப்த ராகங்கள்.ப 72.

25 ஞானப்பிரகாசம் மொனிக்கா, மீனாட்சி, சி. நிசப்த ராகங்கள்.ப.75.

26 அமீருத்தீன் முதலியோர், சின்னச் சின்னச் சித்தாந்தங்கள். ப.38.

27 அமீருத்தீன் முதலியோர், சின்னச் சின்னச் சித்தாந்தங்கள். ப.45

28 மறைமலை, இ சி. புதுக்கவிதையின் தேக்க நிலை. ப.134-137.

29 இக்பால், க து.மு. முகவரிகள், ப.27.

30 அமீருத்தீன் முதலியோர், சின்னச் சின்னச் சித்தாந்தங்கள். ப.29.

31 அமீருத்தீன் முதலியோர், சின்னச் சின்னச் சித்தாந்தங்கள். ப.18.

32 இளங்கோவன், க. விழிச்சன்னல்களின் பின்னாலிருந்து. ப.6.

33 இளங்கோவன், க. மௌனவதம். ப.10.

34 ஞானப்பிரகாசம் மொனிக்கா, மீனாட்சி, சி. நிசப்த ராகங்கள். ப.19.

35 இராஜசேகரன், முகவுரை, சின்னச் சின்னச் சித்தாந்தங்கள். ப.VIII.

36 அமீருத்தீன் முதலியோர், சின்னச் சின்னச் சித்தாந்தங்கள். ப.39.

37. இளங்கோவன், க மௌனவதம். ப 62.

38. இளங்கோவன், க. மௌனவதம். ப.67.

39. இளங்கோவன், க. மௌனவதம் ப.54.

40. இளங்கோவன், க. மௌனவதம். ப 59.

41. இளங்கோவன், க மௌனவதம். ப 64

42. இளங்கோவன், க. விழிச்சன்னல்களின் பின்னாலிருந்து. ப.73.

43. இளங்கோவன், க. மௌனவதம். ப.3

44 இளங்கோவன், க. விழிச்சன்னல்களின் பின்னாலிருந்து.
ப.25, 37-41, 42-47, 56, 87-88, 91-96, 97-99.

45. இளங்கோவன், க மௌனவதம் ப.29.

46. ஞானப்பிரகாசம் மொனிக்கா, நிஜத்தின் நிழல்கள் ப 12

47. ஞானப்பிரகாசம் மொனிக்கா, நிஜத்தின் நிழல்கள். ப.30,34,44,61,64

48 ஞானப்பிரகாசம் மொனிக்கா, நிஜத்தின் நிழல்கள். ப.24,60-61,63.

49. ஞானப்பிரகாசம் மொனிக்கா, மீனாட்சி, சி. நிசப்த ராகங்கள். ப.38-39.

50. இக்பால், க து மு முகவரி ப 79.

51. இக்பால், க.து.மு. முகவரி ப.80-81.

52. அமீருத்தீன் முதலியோர், சின்னச் சின்னச் சித்தாந்தங்கள். ப.7.

53. அமீருத்தீன் முதலியோர், சின்னச் சின்னச் சித்தாந்தங்கள். ப.49.

54 இளங்கோவன், க. விழிச்சன்னல்களின் பின்னாலிருந்து. ப 10-12.

55. ஞானப்பிரகாசம் மொனிக்கா, நிஜத்தின் நிழல்கள் ப.28.

56. அமீருத்தீன் முதலியோர், சின்னச் சின்னச் சித்தாந்தங்கள் ப.32.

57. அமீருத்தீன் முதலியோர், சின்னச் சின்னச் சித்தாந்தங்கள்.ப.50.

58. அமீருத்தீன் முதலியோர், சின்னச் சின்னச் சித்தாந்தங்கள்.ப 26.

59. இளங்கோவன், க. விழிச்சன்னல்களின் பின்னாலிருந்து. ப.70

60. ஞானப்பிரகாசம் மொனிக்கா, நிஜத்தின் நிழல்கள். ப 45-46

61. ஞானப்பிரகாசம் மொனிக்கா, நிஜத்தின் நிழல்கள் ப.55.

62 ஞானப்பிரகாசம் மொனிக்கா, மீனாட்சி, சி. நிசப்த ராகங்கள். ப.76.

63 அமீருத்தீன் முதலியோர், சின்னச் சின்னச் சித்தாந்தங்கள். ப 5-6.

64 ஞானப்பிரகாசம் மொனிக்கா, மீனாட்சி, சி. நிசப்த ராகங்கள். ப.77.

65. ஞானப்பிரகாசம் மொனிக்கா, மீனாட்சி, சி. நிசப்த ராகங்கள். ப.54.

66. இளங்கோவன், க விழிச்சன்னல்களின் பின்னாலிருந்து. ப.98-99.

67 ரவி, கவியோசை ப 11.

68 ஞானப்பிரகாசம் மொனிக்கா, நிஜத்தின் நிழல்கள். ப.30.

69. அமீருத்தீன் முதலியோர், சின்னச் சின்னச் சித்தாந்தங்கள். ப.13.

70 இளங்கோவன், க. மௌனவதம். ப.51-52.

71 இளங்கோவன், க. மௌனவதம். ப 80-82.

72. அமீருத்தீன் முதலியோர், சின்னச் சின்னச் சித்தாந்தங்கள், முன்னுரை.

தமிழர் வழிபாடு

செல்வ அம்பிகை நடராசா

தமிழர்கள் காலந்தோறும் வழிபாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி வருகின்றனர். எமது முன்னோர்களால் பேணிவைக்கப்பட்ட வழிபாட்டு மரபுகளைப் பின்பற்றியும், காலமாற்றத்துக்கேற்ப புதிய நடைமுறைகளை ஏற்றும் வழிபாடு ஆற்றப்படுகின்றது. சமயம் என்பது பிற்காலத்தில்தான் தோற்றம் பெறுகின்றது. அதன் முன்பிருந்தே இயற்கையோடு இணைந்த வகையில், தமிழர் வழிபாட்டு நடைமுறைகளை ஆற்றினர். சமயம் கடந்த நிலையில்,- யாவரும் பின்பற்றக் கூடிய வகையில் வழிபாட்டு நடைமுறைகள் அமைகின்றன தமிழர்களுடைய வழிபாட்டு மரபுகளைப் பேணுகின்ற நிறுவனமாகக் கோவில்கள் அமைகின்றன. பிற பண்பாட்டுத் தாக்கங்கள், விஞ்ஞான வளர்ச்சி போன்றன தமிழர்களுடைய வழிபாட்டு நடைமுறையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இதனால் தமிழர்களுடைய வழிபாடு பற்றிய தெளிவின்மை, முரண்பாடுகள், விமர்சனங்கள் தோன்றியுள்ளன. இத்தகையதொரு நிலையில், இளந்தலைமுறையினர் எம் முன்னோர்களால் பேணி வைக்கப்பட்ட வழிபாட்டு மரபுகள் பற்றி அறிவதற்கு, வழிபாடு பற்றிய மீள்பார்வை அவசியமாகின்றது.

வழிபாட்டு நடைமுறை – சொல்லும் பொருளும்

வழிபாட்டு நடைமுறை என்ற தொடரானது வழிபாடு நடைமுறை என்ற இரு சொற்களின் இணைவாகும். இச்சொற்களைத் தனியாகப் பொருள் கொள்ளும் போதே கருத்துத் தெளிவுறும்.

*வழிபாடு என்ற சொல்லுக்கு, **தமிழ்மொழியகராதி** அப்பியாசம், ஆராதனை, தாழ்மை, வணக்கம், வழிபடல் என்னும் பொருள்களைத் தருகின்றது **தமிழ் லெக்சிகன்** வழிபடல் என்னும் சொல்லுக்கு, பின்பற்றுதல், வணங்குதல் எனப் பொருள் தருகின்றது. **ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், சிலப்பதிகாரம்** ஆகிய பழந்தமிழ் இலக்கியங்களில், வழிபாடு என்ற சொல் வழங்கப்பட்டிருக்கின்றது **ஆசாரக்கோவை** பத்தாம் பாடல், தேவர் வழிபாடு என்று குறிப்பிடுகின்றது **சிறுபஞ்சமூலம்** 42 ஆம் பாடல், தெய்வத்தை எஞ்ஞான்றுந் தேற்ற வழிபாடு செய்வதே பெண்டிர் சிறப்பு எனக் கூறுகின்றது. **சிலப்பதிகாரம்** கனாத்திறம் உரைத்த காதை, வழிபாடு பற்றிச் சற்று விளக்கமாகத் தருகின்றது.*

ஆர்த்த கணவன் அகன்றனன் போயெங்கும்

தீர்த்த துறைபடிவே னென்றவனைப் பேர்த்திங்கன்

மீட்டுத் தருவா யெனவொன்றன் மேலிட்டுக்
கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள்

பழக்க வழக்க மரபுநிலைகள் அனைத்தையும் ஒருங்கே குறிப்பதாக, நடைமுறை என்ற சொல் அமைகின்றது. நடைமுறை என்பது, செயல் முறையினை அடியொற்றியதாகும் மனிதன் தான் ஏற்றுக் கொண்ட நம்பிக்கைகளின் அடிப்படைகளில் மேற்கொள்வதாக இது அமையும் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான ஊடகமாக விளங்கும் வழிபாடானது, பல்வேறு செயல் முறைகளை உள்ளடக்கி நடைமுறையாகின்றது. வழிபாடு, நடைமுறை என்ற இரண்டு சொற்களும் இணைந்து வழிபாட்டு நடைமுறையாகி ஆழ்ந்த பொருளைத் தருகின்றன. வழிபாடு தொடர்பான பல்வேறு நடைமுறைகளைத் தொகுத்தளிப்பதாக இது அமைகின்றது மனோன்மணி சண்முகதாஸ் வழிபாட்டு நடைமுறைகள் பற்றி அறிய உதவும் கால வரன்முறையான சான்றுகளைப் பின்வருமாறு காட்டுகின்றார்.

1 புராணக்கதைகள் தரும் தகவல்கள்

2. இலக்கியப்பாடல்கள் தரும் குறிப்புகள்

3 கர்ணபரம்பரைக் கதைத் தகவல்கள்

4. கல்வெட்டுக் குறிப்புகள்

5. வரலாற்றாசிரியர்களது குறிப்புகள்

6 பிறநாட்டார் குறிப்புகளில் வந்துள்ள தகவல்கள்

7 தலவரலாற்றுக் குறிப்புகள்

8. பிரதேச வழிபாட்டு நடைமுறை விளக்கங்கள்

9. சிற்ப ஓவியங்கள் காட்டும் விளக்கங்கள்

இத்தகைய சான்றுகள் வழிபாட்டு நடைமுறையின் தோற்றநிலை, வளர்ச்சிநிலை மாற்றங்களை இனங்காண்பதற்குப் பெரிதும் உதவுவனவாக அமையும்.

இயற்கை நிலைப்பட்ட வாழ்வியல்

மலைப்பிரதேசமாகிய குறிஞ்சி, காட்டுப்பிரதேசமாகிய முல்லை, வயற்பிரதேசமாகிய மருதம், கடற்கரைப் பிரதேசமாகிய நெய்தல், வறண்ட பிரதேசமாகிய பாலை என ஐந்து வகையான இயற்கைப் பிரிவுகளை உடையது

தமிழ்நாடு. மேற்குறித்த ஒவ்வொரு நிலப்பரப்புகளினதும் பருவமாறுதல்கள், இயற்கை வளங்கள் என்பனவுக்கேற்ப வாழுகின்ற மக்களுடைய வாழ்க்கை முறைகளும் அமைந்தன. இயற்கையானது மனித வாழ்வின் மாறுதல்களில் பிரதானப் பங்காற்றுகின்றது. இம்மாறுதல்கள் புறத்தே தெரிவதில்லை. மனிதனின் வாழ்வியலை உற்று நோக்குமிடத்து, அவன் வாழ்வின் போக்குகளைத் தீர்மானிக்கும் காரணியாக இயற்கை அமைந்துள்ளதை இனங்காண முடியும்

பழந்தமிழருக்கு அமைந்திருந்த சூழ்நிலை எம்மினின்றும் வேறானது. இன்று நாம் அறிவியலின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறோம். வாழ்வின் பெரும்பாகத்தைச் செயற்கைக்கு அளித்திருக்கிறோம் சிறிதளவுதான் இயற்கையின் சக்திக்கு இடமளிக்கிறோம். ஆனால் பழந்தமிழர் பெரும்பாகத்தை இயற்கையின் சக்திக்கு அளித்திருந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கையானது இயற்கையோடு இணைந்த வகையில் அமைந்தது அகம், புறம் ஆகிய வாழ்வியலின் இருநிலைகளிலும் இயற்கை வகித்த பாகம் அளவிடற்கரியது.

பழந்தமிழர்களுடைய நிலம் தொடர்பான வாழ்வியலில் ஓர் ஒழுங்கு முறை பேணப்பட்டுள்ளது. ஐவகையான நிலங்களுக்கும் சிறப்பானதான புள், விலங்கு, மலர், மரம், உணவு, தொழில், தெய்வம் போன்றன அமைந்தன. நிலத்தின் இயல்புகளில் ஏற்பட்ட மாற்றங்கள் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டன. ஓராண்டில் ஏற்படுகின்ற பருவ மாற்றங்களைப் பெரும்பொழுதுகளாக அமைத்துக் கொண்டனர். ஒரு நாளில் ஏற்படுகின்ற கால மாற்றங்களைச் சிறுபொழுதுகளாக வகித்துக் கொண்டனர். கீழ்வரும் அட்டவணைகள் பொழுதுகள் பற்றி அறிய உதவும்.

ஒருநாள்					
பகல்			இரவு		
பகல்	உச்சி	மாலை	முன்னிரவு	யாமம்	பின்னிரவு
6	12	6	9	12	3

ஓராண்டு

மாரி			கோடை		
கார்	கூதிர்	முன்பனி	பின்பனி	இளவேனில்	முதுவேனில்
ஆவணி புரட்டாசி	ஐப்பசி கார்த்திகை	மார்கழி தை	மாசி பங்குனி	சித்திரை வைகாசி	ஆனி ஆடி

எம் முன்னோர்கள் இயற்கைச் சூழல் பற்றிய கணிப்பீட்டில் தெளிவுடையவர்களாக இருந்தார்கள். இன்று நாம் காலமாற்றங்களை அறிவதற்கு நாட்காட்டி, கடிகாரம் இவற்றின் உதவிகளை நாடுகின்றோம். இயற்கைச் சூழல் பற்றிய தெளிவின்மையே, இயற்கை நிலைகளின் மாற்றங்களை இனங்காண முடியாமைக்கான காரணமாகும். ஆனால் பழந்தமிழர் காலமாற்றங்களை இயற்கையிலுள்ள செடி, கொடிகள், மலர்கள் இவற்றின் வாயிலாக அறிந்து கொண்டனர் இவற்றின் தளிர்நிலை, மலர்நிலை, உதிர்நிலை இவற்றை அடிப்படையாகக் கொண்டு காலங்களைக் கணித்தனர். இயற்கை நிலையான காலக்கணிப்பீட்டினைக் கொண்டு பிறப்பு, இறப்பு, வழிபாடு, விழாக்கள் போன்ற அனைத்தையும் கணித்தனர் காலத்தைக் கணிப்பதற்குரிய பிரதானக் கருவியாக மலர்கள் அமைந்தன. ஓராண்டில் பருவங்களுக்கேற்ப மலரும் மலர்கள் வாயிலாகவும், ஒருநாளின் பொழுதுகளுக்கேற்ப மலரும் மலர்கள் வாயிலாகவும் பருவ மாற்றங்களைப் பதிவு செய்து கொண்டனர்.

இயற்கைச் சூழல் பற்றிய அறிவு வாழ்க்கை நடைமுறையோடு இணைந்த வகையில் அமைந்திருந்தது. தம்முடைய அடிப்படைத் தேவைகளை இயற்கையிலிருந்து பெற்றுக் கொண்டனர். அத்தோடு இயற்கையின் துணை கொண்டு தம்முடைய திறனையும் பயன்படுத்திப் புதிய உற்பத்திகளைப் பெற்றுக் கொண்டனர். பருவ மாற்றங்களுக்கேற்ப அனைத்துத் தொழிற்பாடுகளும் அமைந்தன உணவு, உடை உறையுள் ஆகியன இயற்கைச் சூழலுக்கேற்ப அமைந்தன.

இயற்கையோடு தமிழர் கொண்டிருந்த தொடர்பினைச் சங்கஇலக்கியங்கள் சான்று பகர்கின்றன. **புறநானூறு** இரண்டாம் பாடலில் ஐந்து பூதங்களும் உலகின் தனிமங்களாகக் காட்டப்பட்டுள்ளன. இவை ஒன்றிற்கொன்று முரண்பட்டவையாகவும் உறவுடையதாகவும் விவரிக்கப்பட்டுள்ளன. விண்ணானது வெளித்தன்மையுடையது பூமியின் மேல் உள்ளது. இவையிரண்டையும் வளி என்ற ஒன்று பிரிக்கின்றது. அதன் உச்சியில் தீயிருக்கின்றது. இவை இரண்டுக்குமிடையில் நெருங்கிய தொடர்புண்டு. எனினும் அவை இருவேறு பூதங்களே. தீயும் நீரும் முரண்பட்ட இயல்புடையன.

மண்டிணிந்த நிலனும்

நிலனேந்திய விசும்பும்

விசும்புதைவரு வளியும்

வளித்தலைஇய தீயும்

தீமுரணிய நீருமென்றாங்

கைம்பெரும் பூதத் தியற்கைபோல

இங்கு ஒவ்வொரு பூதத்திற்கும் தனித்தன்மையான இயல்புகள் சுட்டிக் காட்டப்பட்டாலும், இறுதியில் அனைத்தும் இயற்கை என்ற கருத்தில் உள்ளடக்கப்படுவதைக் காணலாம் இச்சக்திகள் பெரும்பாலும் மனிதசக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் அமைந்துள்ளன என்ற கருத்தினடிப்படையில் பூதங்கள் என்ற அடைமொழி வழங்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

மனிதன் தன்னுடைய ஐம்பொறிகள் வாயிலாக ஐம்பூதங்களுடன் தொடர்பாடல் செய்து, அதை ஆட்சிப்படுத்தி வந்தான் ஐம்பொறிகள் மூலமாகவே இயற்கை மாற்றங்களை அவதானித்து, அதற்கேற்றபடி தனது வாழ்வியல் நடைமுறைகளையும் அமைத்துக் கொண்டான். ஐம்பூதங்களுடன் மனிதன் கொண்டுள்ள தொடர்பாடலை விளங்கிக் கொள்ள கீழ்வரும் வட்டவரைபு உதவும்.



இயற்கையினால் மனிதனுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்களினால் மனிதன் இயற்கை மீது அச்சங் கொண்டு, அதன் சீற்றத்தைத் தணிப்பதற்காக இயற்கை வழிபாடுகளை மேற்கொண்டான் என மானிடவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன ஆனால் மனிதன் மேற்கொண்ட இயற்கை வழிபாட்டினை உற்று நோக்குமிடத்து, ஓர் உண்மை புலனாகும் இயற்கையை நன்கு உணர்ந்து கொண்ட மனிதன் அதனால் அளவிறந்த நன்மைகளை அடைந்தான். தான் அடைந்த நன்மைகளுக்கு நன்றிக்கடனாக, வழிபாட்டு நடைமுறைகளை மேற்கொண்டான். பருவங்களுக்கிடையிலான பருவமாறுதல்களை வரவேற்றும், பயிர்கள் செழித்து மக்கள் சிறப்புற வாழவும் வழிபாடுகளையும், விழாக்களையும் மேற்கொண்டான். அத்தோடு இயற்கை மூலம் கிடைத்த கொடைப்பொருட்களையும், தன்னுடைய வினைத்திறமையால் உருவாக்கிய விளைபொருட்களையும் இயற்கைத் தெய்வத்துக்குக் காணிக்கைப் பொருளாக்கினான். இவ்வழிபாட்டு நடைமுறைகள் அவனது உள்ளத்தில் புதிய தெம்பினையும் மகிழ்ச்சியினையும் உண்டுபண்ணின. இவ்வழிபாட்டோடு இணைந்த வகையில் இசையும், கூத்தும் தோன்றின. இவர்களால் பேணிவைக்கப்பட்ட வழிபாட்டு நடைமுறைகள் இன்றைய மனிதர்களையும் வழிநடத்திச் செல்லவல்லவை.

வழிபடு தெய்வமும் வழிபாட்டு நடைமுறையும்

எமது முன்னோர்களின் ஆரம்பகால வழிபடு தெய்வங்களாக இயற்கையின் கூறுகள் அமைந்தன தம்முடைய வாழ்வியலுக்கு உதவிய இயற்கையைப் பணிந்து போற்றினர். இயற்கையின் கூறுகளான நிலம், மழை, தீ, காற்று, வானம், ஞாயிறு, திங்கள், மரம் போன்றன வழிபடப்பட்டன. உலகப் பண்பாட்டு வரலாற்றினை எடுத்து நோக்குமிடத்து, அங்கும் இயற்கையின் கூறுகள் பயனடிப்படையில் வழிபடப்பட்டமை புலனாகும். எம் முன்னோர்கள் இயற்கையின் மூலம் கொடைகளை மட்டும் பெற்றுக் கொள்ளவில்லை. அவர்களுடைய உடல் வளர்ச்சி, உளவளர்ச்சிக்கும் இயற்கை வழிபாட்டு நடைமுறைகள் உதவின.

இயற்கை நிறைந்த இடங்களில் கடவுள் விரும்பி உறைவதாகக் கருதினர். மன்றம் பொதியில், கள்ளி, முதுமரம், மலை, பெண்ணை(பனை), ஆலமரம் போன்றவை வழிபாட்டுக்குரிய இடங்களாக விளங்கின. **திருமுருகாற்றுப்படையில்** வரும் பாடலடிகள், இயற்கை எழில் நிறைந்த இடங்களில் கடவுள் விரும்பி உறைவதைச் சுட்டுகின்றன.

காவும் கானும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்

இல்லில் தெய்வம் ஏற்றி வழிபட்ட நிலையினை நெடுநல்வாடை சுட்டுகின்றது.

நெல்லும் மலரும் தூஉய்க்கை தொழுது
மல்ல லாவண மாலை யயர

இங்கு இல்லில் அமைந்த தெய்வத்தினை மாலைக்காலத்தில் பெண்டிர் விளக்கேற்றி நெல்லும் மலரும் தூவி வழிபட்டமை பயன் கருதிய வழிபாடாக அமைகின்றது.

தமிழரும், யப்பானியரும் பண்பாட்டு அடிப்படையில் நெருங்கிய தொடர்புடையவர்கள். யப்பானியர்கள் தமது ஆற்றலுக்கு மேற்பட்ட சக்திகளைக் கமி என அழைத்தனர். மலை, கடல், ஆறு, மரம், இடி, மின்னல், விலங்கு, பிதுர், நெருப்பு, சூரியசந்திரர்கள் போன்றன வழிபாட்டுக்குரியனவாயின. மரங்கள் கமியின் இயற்கைநிலை உருவங்களெனக் கொள்ளப்பட்டன

பண்டைக் காலத்தில் இயற்கையின் தன்மைக்கேற்ப நிலங்கள் பாகுபடுத்தப்பட்டிருந்தன. ஒவ்வொரு நிலத்துக்குமுரியதாகத் தெய்வங்களும் வகைப்படுத்தப்பட்டிருந்தன.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே

எனத் தொல்காப்பியம் சுட்டுகின்றது. பாலை நிலத்துக்குத் தெய்வம் குறிப்பிடப்படவில்லை. கொற்றவை என்னும் பெண் தெய்வம் இந்நிலத்துக்குரிய தெய்வமாக வழிபாடாற்றப்பட்டது. ஒவ்வொரு நிலத்துக்குமுரிய தெய்வங்களோடு அந்நிலங்களுக்குமுரிய தொழில்களும் இயைபுபட்டிருப்பதும் இணைத்து நோக்க வேண்டியவொன்று. இதனை விளங்கிக் கொள்ள கீழ்வரும் அட்டவணை உதவும்.

தெய்வம்	சிறப்பு	நிலம்	தொழில்
மாயோன்	ஆயர் சேரியில் பிறந்தவன்	முல்லை	ஆநிரை மேய்த்தல்
சேயோன்	மலையில் விரும்பி உறைபவன் வள்ளியை மணம் புரிந்தவன்	குறிஞ்சி	வேட்டையாடுதல் தினைப்புனக்காவல்
வேந்தன்	மழைக்குரியவன்	மருதம்	வேளாண்மை
வருணன்	கடல்வளங்களோடு தொடர்புபட்டவன்	நெய்தல்	மீன்பிடி உப்புவிளைவித்தல்
கொற்றவை	வீரம் வெற்றி	பாலை	ஆறலைத்தல் போர்

ஒவ்வொரு நிலத்தில் வாழ்ந்த மக்களும் இயற்கைநிலைக்கேற்ப, பலவிதமான விளைபொருட்களைப் பெற்றுக் கொண்டனர். இயற்கையின் கொடைகளாகக் கிடைத்தவற்றைத் தம் நிலங்களுக்குரிய தெய்வங்களுக்குக் காணிக்கையாக்கினர். தம் தொழில்களோடு இணைந்த இயற்கைப் பிரதேசங்களை மடை போடுவதற்குரிய இடங்களாகத் தெரிவு செய்தனர். சங்க இலக்கியங்களில் மடையிடுதல் தொடர்பான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன

தெய்வ மடையில் தேக்கிலைக் குவை இறும் (பெரும். 104)

பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு (குறுந். 362)

படையிடுவான் மன் கண்டீர் காமன் மடையடும்
பாலொடு கோட்டம் புகின் (கலி.109:19–20)

வழிபாட்டு நடைமுறைகளானவை தனிநிலையிலும், கூட்டுநிலையிலும் நடைபெற்றன. வழிபாட்டு நடைமுறைகள் கூட்டுநிலைப்படும் போது, சமுதாயத்திலுள்ள அனைவருமே தொழிற்பாகுபாடின்றி ஒற்றுமையுடன் வழிபாடாற்ற முடிந்தது. மனித இனத்தை ஒன்றுபடுத்தி அவர்களின் வாழ்வில் அயர்வினைப் போக்கிப் புத்துணர்ச்சியும், மலர்ச்சியும், நம்பிக்கையும் ஏற்படுத்துவனவாகப் பழந்தமிழர் வழிபாட்டு நடைமுறைகள் அமைந்தன.

வழிபாட்டு நடைமுறையின் வளர்ச்சியும் மாற்றமும்

வடமொழிப் புராண இதிகாசக் கதைகள் தென்னாட்டிலும் பரவத் தொடங்கிய போது தமிழர் வழிபாட்டுச் சிந்தனையிலும் மாற்றங்கள் ஏற்படத்தொடங்கின இயற்கை நிலைப்பட்ட தெய்வங்களோடு உருவங்களிலும்

நம்பிக்கை ஏற்படத் தொடங்குகின்றது. வழிபடு தெய்வங்களுக்கு உருவங்கள் சமைத்து வழிபாடாற்றத் தொடங்குகின்றனர் தென்னாட்டுத் தெய்வங்களுடன் ஆரியத் தெய்வங்கள் இணைக்கப்பட்டன இயற்கை நெறிப்பட்ட வழிபாட்டு நடைமுறைகளோடு வடநாட்டுக் கிரியைகளும் சேர்க்கப்பட்டன சங்க இலக்கியங்களில் வடநாட்டு வழிபாடு பற்றிய பதிவுகள் இடம்பெற்றுள்ளன கடவுள் வழிபாட்டுப் பாடல்களைக் கொண்டமைந்த பரிபாடலை எடுத்து நோக்குமிடத்து மரபாகப் பின்பற்றி வந்த இயற்கை வழிபாடும் வடநாட்டு வழிபாடும் இணைந்ததொரு நெறியினைக் காணக்கூடியதாக உள்ளது

இறைவனுக்கு உருவம் கொடுத்து வழிபடும் வளர்ச்சிநிலை வழிபடும் இடங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. மேடையமைப்புகள், கூரைகள் கொண்டமைந்த செயற்கை நிலையான வழிபடுமிடங்கள் அமைக்கப்பட்டன இவையே பின்னாளில் கோவில் என்னும் கட்டட அமைப்புக்கு வழிகோலின அவைதிகச் சமயங்களின் வருகையினால் நலிவடைந்திருந்த இந்துசமயத்தை நிலைநிறுத்த வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டது. இந்நிலையில் உருவ வழிபாடு கோயிலமைப்புகளில் அவசியமாகியது. கோயிலை மையமாகக் கொண்டு நுண்கலைகளும் வளர்ச்சியடைந்தன. கடற்கரையிலும் வயல்வெளியிலும் ஒன்று கூடியும் மலைகளில் ஏறியும் அடர்காடுகளின் மத்தியில் சென்றும் கொடும்பாலைகளில் இருந்தும் வழிபாடாற்றிய பழந்தமிழர் கோயிலமைப்பு உருவாகியதும் கோயிலைச்சுற்றி ஆடிப்பாடி வலம்வருதல் தலயாத்திரை செய்தல் போன்ற நடைமுறைகளைப் பின்பற்றினர்.

ஆரம்ப காலங்களில் வழிபாட்டு நடைமுறைகளில் பெண்கள் முக்கிய இடம்பெற்றனர். வழிபாட்டு நடைமுறையோடு இணைந்த இசை, கூத்துகளிலும் பெண்களின் பங்கு அதிகமாகும். அகஇலக்கியங்களில் தலைவியின் உடல்மெலிவுக்குக் காரணமறிய தாயார் குறி கேட்பர். இக்குறிபார்த்தலில் கட்டுக்கேட்டல் கழங்கு பார்த்தல் என இருவகையுண்டு. கட்டுக்கேட்டல் குறிமுறை பெண்களால் நடத்தப்பட்டது இப்பெண்கள் அகவன்மகள், முதுவாய்ப் பெண்டிர், செம்முதுபெண்டிர், அறியுநர் என அழைக்கப்பட்டனர். நாளடைவில் இந்நடைமுறை ஆண்களோடு தொடர்புபடுத்தப்படுகின்றது. வேலன் வெறியாடல் நிகழ்வுகள் தொழிலடிப்படையில் ஆண்களால் மேற்கொள்ளப்படுவதாக மாற்றமுறுகின்றது. இதன் தொடர்ச்சியான வளர்ச்சியாகக் கோயில் வழிபாட்டு நடைமுறையில் ஆண்கள் பிரதான இடம்பெறுகின்றனர்.

இயற்கைநிலையான இடங்களில் மடைபரவும் வழக்கம் ஆலயங்களின் தோற்றத்தோடு வெளிவீதிகளில் இடம்பெறும் வெளிமடையாக

மாற்றமுறுகின்றது சிறப்பாக வடமராட்சிப் பிரதேசத்தில் வெளிமடையாகக் காய்மடைபூமடை போட்டு வழிபாடு செய்யும் நடைமுறை நிலவுகின்றது. இவ்வழிபாட்டில் முக்கனிவகைகளும், பொங்கற்சோறும், மலர்களும், நறுமணப்புகையும் முக்கிய இடம் பெறுகின்றன மடையிடுதல் தொடர்பாகத் தமிழர்கள் மத்தியில் கருத்துத் தெளிவின்மை காணப்படுகின்றது பிராமணிய வழிபாட்டின் வருகையோடு மடையிடுதல் தாழ்ந்தசாதியினரோடு இணைந்த சிறுதெய்வ வழிபாட்டில் அடக்கப்பட்டுக் குறைவாக மதிப்பிடப்பட்டது. தைப்பொங்கல், பனம்பாத்திநாச்சியார் படையல், புதிதாகக் காய்த்த காய்கனிகளைத் தெய்வத்துக்குக் காணிக்கையாக்கல் போன்ற நடைமுறைகளின் தோற்றநிலை இம்மடை போடுதலில் இருந்தே ஆரம்பித்ததெனலாம். யப்பானியர்கள் மத்தியிலும் வருடாந்தம் மடையிட்டு வழிபாடு செய்யும் நடைமுறை காணப்படுகின்றது மரங்களின் அடிப்பாகத்தில் கற்களால் பீடம் அமைத்து உணவுப் பொருட்களையும் ஏனைய விளைபொருட்களையும் மடைபரவி வழிபடுகின்றனர் சிறப்பாகச் சோற்றுத்திரளை, கருவாடு, பச்சைமீன், உப்பு, நீர், பழவகை என்பன பிரதான மடைப்பொருட்களாயின

இயற்கையோடு இணைந்த தமிழர் வாழ்வியலில் பிறநாட்டுப் பண்பாட்டுத் தாக்கங்களால் மாற்றங்கள் ஏற்பட்டன. இயற்கை நெறிப்பட்ட வழிபாட்டு நடைமுறைகளில் செயற்கைநிலை தோன்றத் தொடங்கியது வழிபாட்டுச் சூழல் வழிபாட்டாளர்களின் ஆடை அணிகள் அலங்காரங்கள் என்பவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டன தமிழரின் பண்பாடு மலர்களோடு நெருங்கிய தொடர்புடையது. அவர்களுடைய வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை மலர்களும் மரங்களும் பயன்பட்டன. ஆனால் இன்று செயற்கையான மலர்கள் வழிபாட்டில் விலக்கப்பட்டமலர்கள் போன்றவையெல்லாம் இறைவழிபாட்டில் பயன்படுத்தப்படுகின்றன. இன்று நாம் இயற்கையிலிருந்து எந்தளவுதூரம் விலகியிருக்கின்றோம் என்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டாகும். முன்னோர்கள் மரபாகக் கையளித்த விழாக்கள்கூட ஆடம்பரத்தன்மை கொண்டனவாயின. கோவில்கள் மனதை ஒருமுகப்படுத்தல் என்ற நிலையிலிருந்து விலகிச் சிலசந்தர்ப்பங்களில் களியாட்டங்களுக்குக் களம் அமைத்துக் கொடுப்பவையாக அமைந்துவிடுகின்றன. இவை மனிதனுடைய வாழ்வியலை இயற்கை நிலையிலிருந்து செயற்கை நிலைக்கு இட்டுச்செல்வதற்கு வழிசமைப்பனவாயின. எவ்வாறாயினும் முன்னோர்களால் மரபாகப் பேணிவைக்கப்பட்ட வழிபாட்டு நடைமுறைகள் மக்கள் மனங்களில் ஆழமாக வேரூன்றியிருப்பதனால் அழியாது இன்றுவரை நிலைத்திருக்கின்றன.

இன்றைய நிலையில் வழிபாட்டு மரபும் பேணுகையும்

இன்று நாம் விஞ்ஞானத்தின் விந்தைகளைக்கண்டு வியந்து கொண்டிருக்கின்றோம் எதனையும் விஞ்ஞானத்தின் மூலம் சாதித்துவிட முடியும் என்ற திண்ணம் தோன்றிவிட்டது மனிதன் தன்னுடைய ஆற்றலைவிட விஞ்ஞானக்கருவிகளையே பெரிதும் நம்புபவனாகின்றான். இயற்கையின் மூலம் கிடைக்காதனவற்றைச் செயற்கையின் மூலமே உற்பத்தி செய்து கொள்ளமுடியும் என்ற நிலையை விஞ்ஞானம் தோற்றிவிட்டது. விஞ்ஞானம் மாபெரும் சக்தியாகக் கணிப்பிடப்பட்டது அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் உலகம் முன்னேற்றகரமான பாதையில் சென்றாலும் மறுகரையில் அழிவினையும் எதிர்நோக்குகின்றது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர்.

இயற்கைச்சூழலைக் கட்டுப்படுத்தி வென்றுவிட்டதாக விஞ்ஞானம் நினைத்தது. ஆனாலும் இயற்கையினால் ஏற்படும் பேரழிவுகளைக் கட்டுப்படுத்த இயலவில்லை. ஏற்படப்போகும் அழிவுகள் சிலவற்றை எதிர்வுகூற மட்டும்தான் முடிந்தது. உலகில் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற எரிமலைகளும் பூகம்பங்களும் வெள்ளப் பெருக்குகளும் இயற்கையின் சக்தியைக் காட்டுகின்றன. இத்தகைய நிலைகளில்தான் மனிதன் மாபெரும் சக்தியொன்று இப்பிரபஞ்சத்தை இயக்கிக் கொண்டிருப்பதை உணர்கிறான். தன்னுடைய பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட நிலையில் பொருள்கள் உண்டு என்பதையும் அவை அனைத்துமே ஒரு வரன் முறைக்குட்பட்டு இயங்குவதையும் உள்ளுணர்வால் கண்டு கொள்கிறான் விஞ்ஞானமும் இயற்கையைக் காண்கின்றதெனினும் ஆய்வுரீதியான முடிவினைத்தருவதில் தான் முழுக்கவனத்தையும் செலுத்துகின்றது விஞ்ஞானக்கருவிகளின் பயன்பாடு வாழ்க்கையினை இலகுபடுத்த உதவும். ஆனால் வழிபாட்டு நடைமுறைகள் மனித மனங்களை நல்வழிப்படுத்தி மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டும்.

எம்முன்னோர்கள் இயற்கைச்சூழல் பற்றிய அறிவில் தெளிவுடையவராக இருந்தனர். இயற்கையோடு இணைந்த வகையில் வாழ்வியல் நடைமுறைகளை அமைத்துக்கொண்டனர். சிறப்பாக வழிபாட்டு நடைமுறையோடு இயற்கையானது ஓர்ஒழுங்கு முறையில் தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. இன்றைய இளைய தலைமுறையினருக்கு இயற்கை நிலைப்பட்ட வாழ்வியல் நடைமுறைகள் பற்றிய தெளிவு குறைவெனலாம் அறிவியலின் அடிப்படையில்தான் இயற்கைச்சூழல் பற்றி ஆராய்கிறார்கள். தம்முடைய நாளாந்த வாழ்வியலுடன் இயற்கையை இணைத்துப் பார்க்கத்தவறுகின்றார்கள் பெரும்பாலும் இயற்கைக்கு மாறுபட்ட நெறிகளில்தான் புலன்களைச் செலுத்துகின்றார்கள் அவ்வாறு

செலுத்தாது புலன்களை நிலைநிறுத்தி இயற்கையுடன் உறவாடப் பழகவேண்டும் இயற்கையுடன் உறவு கொள்ளும்போது புலன்கள் தூய்மையடையும். புலன்களின்வழி இயற்கையின்கண் இறைவனைக் கண்டுணரலாம். அப்பர்சுவாமிகள் ஐம்பொறிகளின் கடமைகள் எவையென்பதைத் திருவங்க மாலையில் எடுத்துக்காட்டியுள்ளார்.

கண்காள் காண்மின்களோ- கடல்
நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்டோள் வீசிநின் றாடும் பிரான் தன்னைக்
கண்காள் காண்மின்களோ.

செவிகாள் கேண்மின்களோ- சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்றிற மெப்போதுஞ்
செவிகாள் கேண்மின்களோ

மூக்கே நீமுரலாய்- முது
காடுறை முக்கண்ணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீமுரலாய்.

வாயே வாழ்த்துகண்டாய்- மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்தனை
வாயே வாழ்த்துகண்டாய்.

ஆக்கை யாற்பயனென்- அரன்
கோயில் வலம்வந்து
பூக்கை யாலட்டிப் போற்றியென் னாதஇவ்
வாக்கை யாற்பயனென்.

மனிதன் இயற்கை எழிலில் ஈடுபட்டு அதன்கண் தன்புலன்களைச் செலுத்தி அளவிலா ஆனந்தம் அடைந்தான் பல்வேறு கொடைகளை நல்கிய இயற்கையைப் போற்றிப் பணிந்தான். இதுவே இயற்கை வழிபாடாகியது. இயற்கையின்கண் இறைவனைக் கண்டுணர்ந்தார்கள்.

காக்கைச் சிறகினிலே நந்த லாலா- நின்றன்
கரியநிறம் தோன்றுதையே நந்த லாலா
பார்க்கும் மரங்க ளெல்லாம் நந்த லாலா- நின்றன்
பச்சை நிறந் தோன்று தையே நந்த லாலா
கேட்கு மொலியிலெல்லாம் நந்த லாலா- நின்றன்
கீத மிசைக்குதடா நந்த லாலா
தீக்குள் விரலை வைத்தால் நந்த லாலா- நின்னைத்
தீண்டுமின்பந் தோன்றுதடா நந்த லாலா

எனப் பாரதியாரும் இயற்கையில் வண்ணமாய் இசையாய் உணர்வாய் இறைவனைக் காணுகின்றார்

இன்று அறிவியலின் ஆதிக்கத்தினால் வழிபாட்டு நடைமுறைகளில் செயற்கைநிலை தோன்றியுள்ளது அதுமட்டுமல்லாமல் பிறசமயப்பரம்பல்கள் விமர்சனங்கள் பிறபண்பாட்டுத்தாக்கங்கள் இவைகளுக்கும் முகம்கொடுக்க வேண்டியதாயிற்று இயற்கையோடு தமிழர் கொண்டிருந்த வாழ்வியல் இன்று பெருமளவு மாறிவிட்டது கோயிலமைப்பு அலங்காரங்கள் விழாக்கள் படையல்கள் போன்றவற்றில் செயற்கைத் தன்மை தோன்றிவிட்டது. எனினும் மக்கள் வழிபாட்டில் கொண்டுள்ள நம்பிக்கையானது இந்துசமயம் சனாதனதர்மமாக நிலைபெறக்காரணமாயிற்று மூதாதையர்கள் தாம் கைக்கொண்ட வழிபாட்டு நடைமுறைகளை அடுத்துவரும் தலைமுறையினரும் மேற்கொள்ளும் வண்ணம் பேணிவைத்திருந்தனர் மரபாக வழங்கிவரும் வழிபாட்டு நடைமுறைகள் பின்வந்தவர்களால் முன்னெடுத்துச் செல்லப் படுகின்றன. தைப்பொங்கல், மடையிடுதல், கார்த்திகைதீபம், பாவைநோன்பு போன்ற நடைமுறைகள் இன்றும் தமிழர்கள் வழிபாட்டில் கொண்டிருக்கும் நம்பிக்கையினைக் காட்டுகின்றன கிராமங்களில் நிகழுகின்ற சிறுதெய்வ வழிபாட்டில் பழைய வழிபாட்டு நடைமுறைகளை இனங்காணக் கூடியதாகவுள்ளது தமிழர்களுடைய பண்பாடு வழிபாட்டு நடைமுறைகளினூடாக வளர்த்தெடுக்கப்பட்டது. அதன் நிலைக்களனாக அமைவது ஆலயமாகும். தமிழர்களுடைய தனித்துவமான பண்பாடு தொடர்ந்து வளர்க்கப்படவேண்டுமானால் ஆலயங்களில் வழிபாட்டு நடைமுறைகள் பேணப்படவேண்டும். தமிழ்மக்களுக்கும் தம்முடைய பண்பாடு பற்றிய தெளிவு இருத்தல் அவசியம் தமிழர்களுடைய மரபு சிதையாமல் வரும் தலைமுறையினரும் அறிந்து கொள்ள வேண்டுமெனின் வழிபாட்டு நடைமுறை பற்றிய பயிற்சி இன்றியமையாததாகும். பெரியவர்கள் இதற்கு வழிகாட்டியாக அமையவேண்டும். கோயில் வழிபாட்டு நடைமுறை பற்றி அப்பர் சுவாமிகள் தம்பாடலில் பதிவு செய்துவைத்துள்ளார்.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முனலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீயென்றும்
ஆரூரா வென்றென்றே யலறா நில்லே.

தத்துவக் கருத்துகள் அனைவராலும் விளங்கிக் கொள்ளமுடியாதவை. ஆனால் வழிபாட்டு நடைமுறைகள் எளிதில் விளங்கிப்பின்பற்றக் கூடியவை. இவை ஆழ்ந்த பொருளுடையவை. மனிதனை வையத்து வாழ்வாங்குவாழ வழிசமைப்பவை வழிபாட்டு நடைமுறைகள் எனவே அனைவரும் இவற்றை உரிய முறையில் பின்பற்றிப் பயனுள்ள வாழ்வு வாழவேண்டும்.

பயன்படுத்திய நூல்கள்

1 தமிழ் லெக்சிகன், சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, 1983

2 கதிரைவேற்பிள்ளை, நா. தமிழ்மொழியகராதி.

3. ஆசாரக்கோவை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1949

4 சிறுபஞ்சமூலம், மதறாஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, 1909

5. சிலப்பதிகாரம், உ.வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை, 1960.

6 கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், தமிழர் யப்பானியர் வழிபாட்டு நடைமுறைகள், பரமேஸ்வரம், கும்பாபிஷேகமலர், 1991.

7 சங்க இலக்கியங்கள், கழக வெளியீடு

8. தொல்காப்பியம், அகத்திணையியல் 5, நச்சினார்க்கினியர் உரை, கணேசையர் பதிப்பு, 1948.

9. சண்முகதாஸ், அ. மனோன்மணி சண்முகதாஸ், இத்திமரத்தாள், 1985.

10. திருநாவுக்கரசு நாயனார், தேவாரத்திருப்பதிகங்கள், தருமபுர ஆதீனம், 1958.

11 நந்தலாலா, பாரதியார் கவிதைகள், பூம்புகார் பிரசுரம், 1985.

HISTORICAL LESSONS FROM THE MAN OF TWENTIETH CENTURY: THE LINGUIST-PROFESSOR T.P. MEENAKSHISUNDARAN

P.E. Mohan

Every century or a time span reckoned is understood with the man of that time and his culture. T.P. Meenaksisundaran called himself as a man belonging to twentieth century in totality[1], for his own reasons because he was born on 8th January 1901. Hence he was proud to say that he was a man belonging to twentieth century. He wrote sometime around in 1980 that after few months I will be completing eighty years, as per the lunar calendar a century is over.[2] He is right as a student of philosophy and history. He himself found twentieth century as a century of research.[3] He was republican in spirit, democrat in nature, researcher by talent and trait, teacher by love of teaching, educator by profession and teacher educator by will, Gurudevar by exponent of knowledge, a polyglot and linguist by training, reformer in zeal and practice, a Gandhian in life, Tamilan by birth, Indian by nationality, freedom fighter by merit above all he was a man of traditional lore and modernity. Historian indulges in making estimation about others, events and time he rarely gives estimation about himself. But a student of philosophy and history and historical grooming makes his own personal estimation by self-introspection quite naturally because of the very nature of the subject.

T.P. Meenaksisundaran started his collegiate studies in philosophy in 1920 (Pachaiappa's College, Madras) then turned to legal studies in 1922 and still later pursued history and economics for his post graduation in 1923 and finally to Tamil studies and linguistic studies.[4] His philosophical and historical acumen of knowledge stood all through his life and in the final phase of his life he followed Vedanta and pursued spirituality. It is due to the reflection of Indian thought as practiced by Saints, Yogis and Rishis of the past. This is due to fact of knowledge of Tamil through which he saw India with the factor of assimilation, with ever prevailing concept of "Unity in Diversity" of India. This made him a federalist and republican in spirit and to the deserving claim that he is the man belonging to twentieth century since his life is not of orthodoxy but of reform, research and progress. By this way one of the lessons of his life to humanity is reflection of culture and spirit of that century or a span of measured time.

Being a researcher and writer his writings analyzed the entire gamut of the past of his interest mainly Tamil language, history and culture, linguistics and comparative language studies. His works by research "figured the nature of the times deceased." As he figured the nature of past his life exhibits many historical lessons, they may grouped into two categories namely 1.Historical lessons from his life and 2.Historical lessons from his writings and research.[5] The latter can be divided into two as how history works were useful for a linguist and how his research has the potential to rewrite history for this purpose his works has to be analyzed.

Historical Lessons From His Life

His very first writing published was about the temple, "Kovilai Idippatha? Kondu thirthuvatha?" in 1929. It is a writing to reform the functioning of the temple. As he hails from a patron family of Sintadripet Lord Siva and Lord Vishnu temples and association with theist and reform spirit brought out this article, when E.V. Ramaswamy's Self Respect movement and atheism begun to prevail in the region. Similarly he stopped the dancing of Devadasis on the streets of Sintadripet during the temple procession in a peaceful way and brought an end to such practice.[6] Yet another reform is the stopping of animal sacrifice in the "Thiruvorriyur temple' shows his courage and determination since, he placed his head on the altar of animal sacrifice.[7] Another zeal he exhibited was found in conducting evening classes for the downtrodden section of the society by going to their quarters with lantern light and organizing educational institutions under one banner in the locality. He only introduced Montessori method of education in that locality.[8] These are the hisorical lessons form his life for social, administrative and educational reformers.

T.P. Meenaksisundaran was affectionately called as Te.Po.Mi. by the first letters of his name. Thiru. Vi. Kalyanasundaranar rightly figures his as more than a university.[9] His depth of knowledge is described in Tamil as,

"Avanay pulavan!

Avanay arinjan!

Avanay Tamizai

Muzuthu unarnthon![10]

It describes him as poet, scholar and as a man who has realized Tamil fully and totally. He used to say, "Go and consult the original sources" to his students. He also followed it from the beginning. In 1930 he wrote, 'Valluvarum magalirum' about women in the works of Thiruvalluvar. It was written as a reply to conclusion of few writers of Self-respect movement who have concluded that 'Thirukkural' only enslaved the women in the society. He employed internal criticism[11] to the original source, 'Thirukkural' and pointed out Thirukkural has been criticized because of the commentary of Parimelazhagar who gave explanation with the background of Manu dharma sastra.[12]

T.P. Meenaksisundaran moved with different shades of ideology and projected his view point in practice. He participated in the Freedom struggle by accepting Mahatma's command in the Individual Satyagraha in 1941. He presided over the function organized and faced opposition when Subhas Chandra Bose came to Madras.[13] His zeal to reform the Tamil script naturally found support with Dravida Kalakam an off-shoot of Justice-party and Self-respect movement. The Dravida Kalakam published his work on Tamil script reforms[14] for their propaganda work. He not only found assimilation factor in Indian languages and history he also practiced it by finding company with fellowmen of his own tribe and opposite groups. His public service, educational service made every one with different shade to accept him as their own man inspite of his leaning towards Congress.

As a teacher of Tamil Grammar, he observed ". . . . Tamil Grammar has driven the students who are compelled by some syllabus to memorize the mantras of Pavananti mamuni, to the point of despair."[15] Tolkappiyam and Nannul are monuments of scientific and descriptive grammar.[16] He followed a teaching method of presenting the present first and navigating into the past and further into deep past. He considered his students as his Gurumars, since he loved them questioning and enabling him to provide more and further explanation on the subject.[17]

As a serious researcher he adopted western method to study Tamil Phonology, Dialectology. He seriously involved himself in Historical Linguistics. From 1955 he mastered Transformational Grammar and emerged as a Linguist of par excellence.[18] This has earned a merit of great and permanent distinction in the world of schoalrs and academics. As a scholar and professor he became a perfect model and stimulator for young researchers and his wards. As a research guide

he identified new avenues of unexplored area for research. He suggested topics to study the language of the inscriptions and documents. Inscriptions were original and reliable source of history. These studies paved further knowledge to historical Linguistics. Thus, he carved a history of his own as a multi-faceted personality.

Historical Lessons From His Writings And Research

T.P. Meenaksisundaran's studies and works cover different branches of knowledge spanning from history, psychology and philosophy and to Tamil language and language science. He has authored fourteen books in English about Tamil and Tamil culture.[19] The very purpose of historical studies is to solve the problem of the present and to bridge the past through the present to lead a highway to future. Poet Bharathi during the struggle for freedom observed," No glory and fame is going to come by narrating old stories. Only the mastery of knowledge will make the foreigner to salute you" and directed his fellowmen to achieve the above desired goal.[20] T.P. Meenaksisundaran is one who has translated the above intention of the poet. He showed interest in science and delivered special lecture in Tamil on the "Theory of Relativity" of Einstein. During the Second World War he gave lecture and also wrote in Tamil about Nuclear policy. He helped E.S. Rajeswari to write a book on Montessori method of education in Tamil. A reading of this book will show how much help he has rendered to this author.[21] He has authored forty eight works, fourteen in English and thirty four in Tamil. History of Tamil literature (in Tamil), Age of Sangam, Pattupattu and the contribution of Tamils to world civilization were published posthumously.[22] The best trait of his writing is that at no time he sacrificed chronological sequence, it was his basic methodology. His works pinpointed the areas and avenues for further research.

After Indian independence, in 1947 its impact made him to declare Silapathikaram as "Kudimakkal kappiyam" after a thourough study.[23] He also pointed out the possibility of the inclusion of folk-songs in that epic. He further explained the democratic nature of Tamil society as expressed in the epic and bhakti literature. He agreed with Kailasapathy and disagreed with Vaiyapuri pillai in describing Sangam age as "Heroic age" for him it was age of feudal social order followed the Heroic age.[24]

He started to contribute articles for Tamilkkalanjiyam from 1954 and continued in up to 1963, between these years he has contributed eighty-eight essays

to Kalaikkalanjiyam (encyclopaedia). The articles of Te.Po.Mī.dealt with development of Tamil alphabets over the centuries, the changes in its shape it has underwent from one century to another etc. His other essays and articles dealtwith Advaitam, Grammar, Kappiyam, Gunam, Cittars, Sulamani, History of Tamil language, Tamil literature in twentieth century, History of Tamil grammar, Thirukkuṛal, Thiruvalluvar, Pattupattu, Tamil puranas, Buddhism in Tamil country etc. These essays and articles contain more historical information to be used as secondary source. They also show a high quality of research orientation written to the general public to read and refer. He used different types of sources, literary, inscription etc., to explain the history of Tamil alphabets which is more useful to historian and epigraphist. He has brought out an informative table about the first three Tamil Sangams showing details like chronology, total number of poets their works, grammar works etc.[25]

In his work "Sambandarum and Samanarum", (Jains) published in 1957, he explained clearly that Nayanmar Sambandar, has criticized the Kundas (bad elements) and not the Jains thereby gave his opinion to the controversy.[26] In one of his work, "Indiavin pala mozikalil Samanar thantha ilakkiyankal" he traced the works of Jains in Indian Literature. This work was published by Kasi Parsuvesvara Kazhagam. In this work he wrote and found that the form of sentences in Indian languages in the course of history shows a unity. It is visible when translated form one Indian language to another Indian language[27], his work Samana thamzih ilakkiya varalaru published 1961 is yet another contribution of him in tracing the Jaina Tamil literary history.

In a commemoration volume of his sixty first birth day his papers numbering fifteen of great value were published in 1961 as collected papers of Te.Po.Mī. It covered topics on literature and linguistics. The first paper was his presidential address to the Tamil section of the All India Oriental conference held in Annamalai University from December 26th to 28th 1955. This address is an example of his knowledge of historical orientation. He addressed it in the presence of the then President of India Dr. S. Radhakrishnan. The Philosopher President was very much impressed by his address. This address traced the Indian tradition and contribution of Annamalai University and the beloved Founders of the University, and the unique Tamil spirit in the first paragraph. Then it paid homage to Tamil savants like Dr. Swaminathaiyer, Swami Vipulananda, Vellakkal Subramaniya mudaliyar etc., and further explained Tamil as a classical language and modern

language. It pleaded for the preparation and publication of Tamil lexicon which will help to produce a historical dictionary. He expressed unhappiness about the stagnation in Dravidian studies and the tendencies of "unwanted unwarranted prejudice against the study of other languages." He pleaded for the study of unwritten dialects and wished to verify whether they are really in primitive form. He applied Glottochronology to show the words still in current use. He raised the question when the Dravidian languages separated from each other or from Proto-Dravidian. He observed, "No attempt has been made for the history of literary tendencies, conventions, forms and modes and of the rhythm" to enable to see relative age of historical studies. He felt, "This is what Sandarson has suggested for a study of history itself".[28] All these will be more useful to re-write history. He further pointed out the influence of Tamil thought and culture on Tulsi das, the influence of Saiva saints of Tamilnadu over Telugu and Kannada speaking regions and the Tamil works in Malayalam and influence of Tamil works over Sanskirt and vice-versa etc.[29]

In his second paper "A Plea for a History of Tamil Thought" he found "Indian thought a beautiful tree, a miracle of spiritual science" in Sanskrit. But when the mother tongue of the writers of Sanskrit is considered Sanskrit is equally entitled to be called Tamil thought, Telugu thought etc. Yet one more important information he has mentioned was about Valluvans of south India who preserved their ancient lore in the Sanskrit tongue.[30] His other papers dealt with Tolkappiyam, Nakkirar, Koyil song, Thiru. Vi.Ka., A New light from Tamil on the History of Indian Rhetoric, Teaching of Tamil grammar, the Portuguese Influence revealed by Tamil words, The Tamil script reform, Tamil letters and sounds of the seventeenth century, The Tamil of the seventeenth century and An Eighteenth century Tamil Grammar. A perusal of this work will show the acumen of historical information more about the language which will be useful to historian.

On his sixty-fifth birthday another commemoration volume of his collected papers was brought out in 1965. It has six papers. The first paper was "The history and development of gender in the Dravidian languages." The second paper was on," influence of Dravidian philology on Indian languages." It revealed the great cultural importance of the study of Indian languages. In the third paper "Social aspects reflected in languages" the status of women as reflected in the grammatical works especially the mother in the society is attempted. He felt," It shows the

gradations of social hierarchies on age and social status which later depends of power, wealth and education. The age of foreign domination has led to these gradations being reflected in the modern Tamil. The Democratic Republic has to get rid of these fetters of the traditional age"[31] and expressed his reform spirit.

In his paper, "The Rhythm of the common speech-its glorification by Bharathi", distinguishes two styles one learned poetry and the other the folk-songs and proclaims the poet as the poet of common man.[32] In his paper, "Ethical literature in Tamil" entire ethical literature has been portrayed and highlights the belief of the Brotherhood of Man and Fatherhood of God and aspires to live in the Divine Republic of service and love.[33] He highlights the importance of sant vani in Tamil and other Indian languages to understand a new light for the fundamental unity of India.[34]

His work on "History of Tamil language" (1965) is an example for linguistic research through historical method. He followed this method to study the language since it is connected with geography and time. This work has ten chapters. In this work he explains sources for the history of Tamil language first, a proven historical method and proceeds to Phonology, Morphophonemics and Morphology etc. He classified the sources into two. 1.Works in literary language and 2.Colloquial language. While narrating the sources he cautions with safeguards for every type of source like grammar by native writers, commentaries, grammar by foreign writers, dictionaries, nigantus and inscriptions in Tamil, other languages, foreign references and finally comparative method. At every time he gives caution as trait of scientific historian in identifying pitfalls.[35]

The second chapter is titled as Proto-Dravidian. It traces the history of Dravidian studies, structure of Dravidian language, Morphology. While narrating about Proto-Dravidian he further dwells on South Dravidian and Tamil in the third chapter wherein, he highlighted the Dravidian problem. The fourth chapter deals with the language of cave inscriptions. Here he observed, "...Something like Tamil or Proto south Dravidian. But it must be noted that these inscriptions are in a hybrid language containing Tamil as well as Prakrit words because of Buddhist, who were scholars in Prakrit and not themselves native speakers of Tamil."[36] In Tamilisation, he expressed, "The Sanskrit words in the Prakrit form are found to occur. They throw light on the phonemic structure."[37] In cave inscriptions he

pointed out the absence of Sanskrit sounds.[38] This gives an historical inference to the historian that there was a time in down south without the influence of Sanskrit, and then followed a period of Prakrit influence. He has pinpointed about the Sanskrit words in the Prakrit form that are found to occur in Tamil. He further explains the language of "Tolkappiyam" its age, phonology and morphology and grammatical scheme in the fifth and sixth chapters. Here he argued and proved the existence of two Tolkappiyars and was a student of Agasthier. The seventh chapter dwells on language of Sangam Age, the next one on the language of the Pallava, Chola and Nayaka Ages. He classified the Sangam works on the basis of the order of frequency and numerical preponderance of old forms and made the following classification: (i) Pattuppāttu, Akanāṉūṟu, Puṟanāṉūṟu, Patiṟṟuppattu, Kuṟuntokai, Naṟṟiṇai, Ainkuṟunūṟu (ii) Tirukkuṟaḷ (iii) Paripāṭal, Kalittokai (iv) Cilappatikāram (v) Maṇimēkalai.[39] This Chronological scheme of the works will be useful to a historian to rewrite history of Tamil of the golden Age. In the ninth chapter External history of Tamil, he grouped his discussion and narration under several subtitles based on theme and chronology. The first division deals with words from Tamil to other languages. He has identified the "Munda" as earliest neighbour of the Dravidian Tamil.[40] He explained how the word mayura in Sanskrit is from Munda "marak" as its root in Dravidian root ma or mai which means black or blue in the word "mayil" in English it denotes peacock. Thus he proved the opinion of P.T. Srinivasa Iyengar who has suspected the derivation of the word mayura in Sanskrit from Tamil in 1929 in his work[41]. "History of the Tamils from the earliest times to 600AD". By this explanation Te.Po.Mī has shown the utility of linguistic studies to historical studies and vice versa. Further he discussed about Dravidian words in Sanskrit, words for Indian environment, words indispensable for Dravidian like nīr, (water) etc. By citing Nilakanta Sastri he draws inference to the place name Kanchi in the reference of Chinese traveler Pan-Kou. He found that no Japanese word is found in Tamil but suspects Tamil influence in Japan. He found the relation of the Tamil word "arici" (rice) to Greek word oruza. He made an excellent and successful attempt to trace the Tamil words in English and their occurrence century wise. His next grouping for discussion was about words from other language in to Tamil. This has been branched into early neighbours like Munda, Prakrit and Sanskrit and of the west like Greek, Hebrew and Arabic and later neighbours Dravidian

languages like Telugu, Kannada and other languages like Marathi, Urdu and finally the languages of the west like Dutch, French and English. For all these grouping or classification for discussion the chronology was in the mind of the linguist.

In the last tenth chapter Langauge of the twentieth century a map of Tamil country showing the various nadus is provided. He also projected the concept of Greater Tamil land like that of Greater India attempted in some of the Indian history works. He fully believed in Dravidian heritage and Tamil heritage. He questioned Father Heras. He found, his readings "were based on arbitrary meanings and on arbitrary variations of sound and meaning for one and the same symbol, therefore his conclusions are not acceptable. It is not possible to proceed beyond the Vedic age for any evidence regarding Dravidian languages."[42] He questioned Von Furer Haimendrof regarding his opinion," that conquerors and the conquered could not be linguistically related or could not have borrowed the language of the other. One has to quote only the well known instances of Latin, Celtic and Germanic speakers. Therefore his further argument that Dravidian languages could never been spoken widely in North Indian carries no weight."[43] The works of European scholars divided India into two one as Dravidian on the basis of language and not by geographical place name. He as a linguist accepted the division but amended the idea and proved how the languages of India are again emerging with trends of assimilation and suggested borrowings.

He has pointed out and disproved the Bengal scholars, who have described the swing festival of Thailand as influence of Lord Krishna cult which spread to Thailand from Bengal. He proved it as the influence of "Andal"s Thiruppavai.[44] Later he wrote a book on Siamil Thiruppavai and Thiruvempavai" to establish Tamil influence. He had an opinion and faith based on his knowledge that Tamil language and literature and thought have really influenced the very basics of the Indian thought, history and culture.

He has pointed the real spirit of the Tamils from Narriṇai with regard to nature. In that work it is pointed out by him how a tree was not considered by the Tamils as a mere object of living thing but as their own kith and kin.[45] This is the culture of Tamils towards nature. He has pointed out that the Portuguese words

were borrowed to Tamil, this really poses a problem to historian to look into; since the eastern coast of India was not politically controlled by the Portuguese, even their trade relations were very less in the eastern coast of India.

His work "History of Tamil literature" (1965) is different from other works on this subject; this work followed the scientific methodology. The first chapter contains general remarks with introduction with a note on the sources and the difficulties in using it. It also narrates the chronology as in the traditional reckoning and the chronology by using other criteria. It begins with General remarks about the sources and subject specific. This work has ten chapters. The first chapter with introduction followed by the Sangam poetry, Twin epics, other seventeen works. He classified the Tamil literary history as 1. The golden age of the Sangam poets and its continuation. 2. The Pallava period, 3. The Chola age and its continuation, and 4. The age of foreign contact and the modern age, in the fifth chapter the works of Alwars and Nayanmars before 600 AD and saivisam and vaishnavism of later centuries were discribed. Later he places the Jain epics Perunkatai, Cintāmaṇi and Culāmani in the sixth chapter. It may be due to the historical development of literature and thought as he might have felt on account historical linguistics. He has also pointed out the influence of Sanskrit and Prakrit works in Perunkatai.[46]

